Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 016
சனிக்கிழமை
கார்த்திகை 26ஆம் ந
12 டிசெம்பர் 2020
பக்கங்கள்: 20
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# மருதனார்மடத்தில் ஒருவருக்கு தொற்று

- சந்தையில் மரக்கறிக் கடை வர்த்தகம்
- எழுமாற்றுப் பரிசோதனையில் கண்டுபிடிப்பு
- கொத்தணியாக உருவெடுக்கும் அபாயம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 12

யாழ்ப்பாணம், மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்பவரும், முச்சக்கரவண்டிச் சாரதியுமான ஒருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மருதனார்மடத்தில் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனையிலேயே தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். 19 ›

## நோய் அறிகுறிகளை மறைத்த தொற்றாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 12

மருதனார்மடத்தில் நேற்று கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றாளர் காய்ச்சல் மற்றும் தடிமன் ஏற்பட்டிருந்தும் அதற்கு சிகிச்சை பெறாமல் மறைத்துள்ளார் எனத் தெரிவிக்கப் 19 ›

## மருதனார்மடம் சந்தை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்

யாழ்ப்பாணம், டிசெ. 12

மருதனார்மடம் சந்தையிலுள்ள 262 வியாபாரிகளிடமிருந்தும் இன்று பி.சி.ஆர். மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவருடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுவர்க 19 ›

## சுன்னாகம் பிரதேச சபையினர் சந்தை விடயத்தில் அக்கறையீனம்

### சுகாதாரத் துறையினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 12

மருதனார்மடம் பொதுச் சந்தையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சுகாதாரத்துறையினர் முன்வைத்த பரிந்துரைகளை சுன்னாகம் பிரதேச சபை உரிய முறையில் நடைமு 19 ›

## ஜனவரி மாதம் முதல் முன்பள்ளி ஆரம்பம்!

கொழும்பு, டிசெ.12

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்பள்ளிகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சர் பியல் 19 ›

## தாய்க்கும் பிள்ளைக்கும் கொரோனா

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் நேற்று வெளியிடப்பட்ட பி.சி.ஆர். முடிவுகளின்படி வவுனியாவைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வந்து, தனிமைப்படுத்தப்பட்டிருந்த தாய் மற்றும் பிள்ளைக்கே 19 ›

## 31,000 தாண்டியது கொரோனா!

### 762 பேர் நேற்று அடையாளம்

கொழும்பு, டிசெ.12

இலங்கையில் நேற்று மாத்திரம் 762 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் (மினுவாங்கொட, பேலியகொட, சிறைச்சாலை கொத்தணிகள்) இது வரையில் 27 ஆயிரத்து 747 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 19 ›

## அரசியல் கைதிகள் விடுவிப்பை ஒருபோதும் எதிர்க்க மாட்டோம்!



ஞானசார தேரர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற பெயரில் சிறைச்சாலைகளில் காலத்தைக் கழிக்கின்ற தமிழ்க் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து 19 ›

## முச்சந்தி முரளி



'உந்தாளுக்கு அரளை பேர்ந்திட்டுப் போல... ஒவ்வொரு நாளும் ஒண்டைச் சொல்லுறதும் பிறகு அதுக் கெதிரா இன்னொண்டைச் சொல்லுறதும் வாடிக்கையாகிட்டு...'

## புலிகள் வீரத்தை, தியாகத்தை கொச்சைப்படுத்த மாட்டேன்!

பொன்சேகா அடித்தார் 'பல்டி'



கொழுமம்பு, டிசெ.12

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உன்னதமான தலைவர். அவருக்கு நிகர் அவர்தான். அதே 19 ›

## இந்திய மீனவர் மீறலை திங்களுக்குள் நிறுத்துக

முல்லை. மீனவர்கள் காலக்கெடு

முல்லைத்தீவு, டிசெ.12

முல்லைத்தீவுக்கடலில் இந்திய மீனவர்கள் மேற்கொள்ளும் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்த எதிர் வரும் திங்கட்கிழமைக்குள் நடவடிக்கை எடுக்கப்ப 19 ›

## பளை விபத்தில் ஒருவர் சாவு

கிளிநொச்சி, டிசெ. 12

பளை புதுக்காடு பகுதியில் நேற்றுக் காலை நடந்த விப 19 ›

# வாழைச்சேனை சபை பாதீட்டை நிறைவேற்ற பெரும் களேபரம்

*கதவை உடைத்தது பிள்ளையான் அணி*
*எதிரணி உறுப்பினர்கள் இருவர் காயம்*

**மட்டக்களப்பு, டிசெ. 12**

**மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச சபையில் பெரும் களேபரத்தின் பின்னர், அடுத்த வருடத்துக்கான வரவு- செலவுத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டது. அதற்கு முன்னராக எதிர்ப்பு நடவடிக்கைகளால் எதிரணியின் பெண் உறுப்பினர்கள் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.**

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினரின் தாக்குதலில் தாங்கள் காயமடைந்தோம் என்று காயமடைந்தவர்கள் தெரிவித்தனர். பிரதேச சபை செயலரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொரோனாவை காரணம் காட்டி சபையை ஒத்திவைத்தது, இரகசியமாக வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முயன்றதன் தொடர்சியாகவே மீளவும் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் முயற்சித்தார் என்று கூறப்படுகின்றது.

எதிரணி பக்கம் 12 உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த அமர்வில் ஏற்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்து 2 பேர் கைதுசெய்யப்பட்டனர். தற்போதைய நிலையில் ஆளுந்தரப்பில் 11 உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த நிலையில், விளக்கமறியலில் உள்ள இரண்டு உறுப்பினர்களும் வாக்களிக்கும் வகையில் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன. ஆணையாளர் அந்த கோரிக்கையை ஏற்று, தவிசாளருக்கு அறிவித்திருந்தார் என்று எதிரணி தெரிவிக்கிறது. எனினும், அப்படியொரு அறிவித்தல் தமக்கு கிடைக்கவில்லை என்று தவிசாளர் தெரிவிக்கிறார்.

நேற்றுக் காலை 7.20 மணிக்கே ஆளுந்தரப்பினர் சபைக்கு வந்துவிட்டனர். தவிசாளருடன் இணைந்து அறையைப் பூட்டிவிட்டு அவர்கள் உள்ளே இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

எதிரணியினர் வழக்கமான நேரத்துக்கு வந்து, சபா மண்டபத்தையும் பிரதான வாயிலையும் மூடினர்.

உள்ளூராட்சி ஆணையாளரின் உத்தரவின்படி வாக்கெடுப்பை ஒத்தி வைக்கும்படி கேட்டனர். ஆனால், ஒரு நபர் பெரும்பான்மையுள்ள சமயத்தில் வாக்கெடுப்பை நடத்த பிள்ளையான் தரப்பு விடாப்பிடியாக நின்றது.

சிறிது நேரத்தில் பிள்ளையான் சம்பவ இடத்துக்கு வந்தார். மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் என்ற ரீதியில் தவிசாளரைப் பார்க்க வேண்டும், பிரதேசசபை கூட்டத்தை நடத்த வேண்டும் என்றார். அதற்கு முன்னர் தனது அறையை பூட்டிவிட்டு உள்ளே இருந்த தவிசாளர், யன்னல் வழியாக திறப்பை பிள்ளையான் தரப்பிடம் கொடுத்ததைக் கண்டோம் என்று எதிரணியினர் தெரிவித்தனர்.

பின்னர் பிள்ளையான் அணியினர் தவிசாளரின் அறையை உடைத்து, அவரை வெளியே அழைத்தனர். பின்னர், சபா மண்டபத்தை தடுத்து நின்றவர்களுடன் தள்ளுமுள்ளுப்பட்டனர். பிரதேசசபை செயலாளர் எதிரணியினரின் கோரிக்கையை கேட்டார். அவர்கள் கோரிக்கையைச் சொல்லிக் கொண்டிருந்த போதே அவர் மயங்கி வீழ்ந்தார்.

பின்னர் சபா மண்டபத்தின் கதவுக்கு உள்ளும் வெளியும் நின்று இரு தரப்பும் சிறிதுநேரம் பலப்பரீட்சையில் ஈடுபட்டனர். பின்னர், அதையும் உடைத்துக்கொண்டு உள் நுழைந்த பிள்ளையான் தரப்பினர், எதிரணியினரும் ஊடகங்களும் இல்லாத நிலையில், "வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றி விட்டோம்" என்று அறிவித்தனர்.

இந்த இடர்பாடுகளின்போது எதிரணியின் இரண்டு பெண் உறுப்பினர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பிள்ளையான் தரப்பினரே தங்களைத் தாக்கினர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

**மனநோய்**

"வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளருக்கு தொடர்ச்சியாக வரக்கூடிய நோய் உள்ளது என்று மருத்துவ அத்தியட்சகர் கூறினார். என்னைப் பொறுத்தவரையில் அவருக்கு மனநோய் என்றுதான் பார்க்க வேண்டும். அவரின் செயற்பாடுகள் அவ்வாறுதான் உள்ளன" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மேற்படி கலவரத்தில் காயமடைந்த உறுப்பினர்களை மருத்துவமனையில் பார்வையிட்ட பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்களை அச்சுறுத்தி எவ்வாறு அரசியல் செய்தார்களோ அதே போன்று மறு உருவம் எடுத்துள்ளதை இந்தச் சம்பவம் நிரூபித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

(கு-இ)

# பிரதேச செயலரின் விடுதி மீது கல்வீச்சு

முல்லைத்தீவு, டிசெ. 12

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலரின் விடுதி மீது நேற்று முன்தினம் இரவு விசமிகளால் கல் வீச்சு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசமாக மாந்தை காணப்படுகின்றது. இந்தநிலையில், பிரதேச செயலர் தங்கியிருக்கின்ற விடுதி கூரை மீது கல் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடுதி நுழைவாயிலில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

இது பற்றி நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டனர். அத்துடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

(கு-55)

*நீண்டகால இழுபறியின் பின்னர்*
*மன்னார் மாவட்டத்தில்*

# இணக்கத்துக்கு வந்தது இணைந்த பஸ்சேவை

மன்னார், டிசெ. 12

மன்னார் மாவட்டத்துக்குள் மற்றும் மாவட்டத்துக்கு வெளியே தனியார் மற்றும் அரச பஸ் சேவைகளை இணைந்து வழங்க இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அதன்படி வழமையான நேரங்களில் சிறு மாற்றங்களுடனும் விட்டுக்கொடுப்புகளுடனும் புதிய நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கும் மன்னார் தனியார் போக்குவரத்து சங்கத்தினருக்கும் வழித்தட நேர அட்டவணை தொடர்பில் முரண்பாடுகள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன.

இந்த நிலையில், இருபகுதியினரின் சமரசத்துடன் நேர அட்டவணை தயாரிப்பது பற்றிய கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது

அதில்மே ற்கண்ட இணக்கம் எட்டப்பட்டது. கூட்டத்தில் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் சி.குணபாலன் மாவட்டத்தின் பிரதேச செயலர்கள், மன்னார் தனியார் போக்குவத்து சங்க பிரதிநிதிகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார்சாலை பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(கு-213)

# சுயாதீனமான குழுக்களில் பெரமுன கட்சியின் விசுவாசிகள்!

*ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ. 12

சுயாதீன ஆணைக்குழுக்கள் யாவும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. உயர்பதவிகளுக்கு பெரமுனவின் ஆதரவாளர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஜனநாயகமும், மக்களின் உரிமைகளும் கேள்விக்குறியாகியுள்ளன. இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நல்லாட்சியின்போது சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது. அரச ஊழியர்கள்கூட அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கக்கூடிய சுதந்திரம் இருந்தது. இதனால் நாட்டுக்கு பல நன்மைகள் ஏற்பட்டன. இன்று சுயாதீன ஆணைக்குழுக்கள் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் காலத்தில் பொதுஜன பெரமுனவின் பாதுகாப்புப் பிரிவுக்கு தலைமை வகித்து, பெரமுனவின் அலுவலகத்தில் இருந்து தேர்தலை வழிநடத்திய நபரே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பஸில் ராஜபக்சவின் சித்தாந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என பதவியேற்பு நிகழ்வில் பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் உரையாற்றியுள்ளார். பெரமுனவின் சார்பாகத் தேர்தலில் போட்டியிட்ட ஒருவரும் பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினராக இருக்கின்றார். இவ்வாறானவர்களிடம் எவ்வாறு சுயாதீனதன்மையை எதிர்ப்பார்ப்பது?

சுயாதீன அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கும் வியாபாரிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். விலைமனு கோரல்களின்போது அரச அதிகாரிகள், இவர்களுக்கு அடிபணிய வேண்டிய நிலை ஏற்படும். தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளராகவும் பக்கச்சார்பாக செயற்படும் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு புறத்தில் இராணுவ நியமனங்கள். மறுபுறத்தில் சுயாதீன ஆணைக்குழுவின் உயர் பதவிகளுக்கும், ஏனைய நியமனங்களுக்கும் அரசியல் விசுவாசிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு புறத்தில் இராணுவ நியமனம், மறுபுறத்தில் அரசியல் நியமனம் என அரசின் பயணம் அமைவதால் மக்களின் ஜனநாயகம் மற்றும் உரிமைகள் எல்லாம் கேள்விக்குறியாகியுள்ளன. கடவுள்தான் இனி காப்பாற்றவேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது.' என்றார்.

(ம-44)

# ஹிட்லரின் வழியிலே கோத்தாபய பயணம்!

கொழும்பு, டிசெ. 12

**ஹிட்லரின் வழியிலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் பயணிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் குற்றஞ்சாட்டினார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் மனித உரிமை ஆணைக்குழு என்பது மிக முக்கிய நிறுவனமாகும். பாதிக்கப்படும் மக்களுக்கு நீதி நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் பணியை அது முன்னெடுக்கவேண்டும். பணம் செலவளித்து நீதிமன்றம்செல்ல முடியாதவர்கள் இங்குவந்து தான் தமது குறைகளைக்கூறி தீர்வை பெறுவர். மனித உரிமை ஆணைக்குழுவுக்கு, மனித உரிமை விவகாரம் தொடர்பில் தெரிந்தவர்களே நியமிக்கப்படவேண்டும். ஆனால் இந்த அரசாங்கம் ஜகத் பாலசூரிய என்பவரை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்துள்ளது. யார் இந்த ஜகத் பாலசூரிய? மஹிந்த ராஜபக்ச காலத்தில் அமைச்சராக இருந்தவர். ஆளுநர் பதவியை வகித்தவர். மொட்டு கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர். அவரின் மனைவி ஆளுநராக பதவி வகிக்கின்றார். மகன் தாரக பாலசூரிய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கின்றார். மொட்டு கட்சி உறுப்பினரை எவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கமுடியும்? இது வெட்கம்கெட்ட செயலாகும். அரசாங்கத்துக்கு எதிராக எவ்வாறு முறைப்பாடுகளை முன்வைக்கமுடியும்? அவ்வாறு முன்வைத்தாலும் எவ்வாறு நீதி கிடைக்கும்? முழு உலகமும் சிரிக்கின்றது. இவரின் நியமனத்தை எவ்வாறு நியாயப்படுத்துவது? ஆக மனித உரிமை ஆணைக்குழு என்பது மொட்டு கட்சியின் கிளையாக மாற்றப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்- என்றார். (ம-44)

# வடக்கு, கிழக்கையும் இலக்கு வைக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

### *ஜனவரி முதல் வேலைத்திட்டம் ஆரம்பம்*

கொழும்பு, டிசெ. 12

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சக்தியை மேலும் பலப்படுத்தும் வேலைத்திட்டம் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று உதயனிடம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கட்சி உறுப்பினர்களின் கருத்துகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி பண்டாரவளையில் நடைபெறவுள்ளது. இதன்போது கட்சியின் யாப்புக்கு அங்கீகாரம் வழங்கப்படும். அதன்பின்னர் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் அனைத்து பகுதிகளிலும் கட்சி நடவடிக்கையை பலப்படுத்தும் வேலைத்திட்டம் ஜனவரி முதல் ஆரம்பமாகும். அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.' என்றார். (ம-44)

# கோத்தாபய மீது மக்களுக்கு நம்பிக்கையே இல்லை!

### பெரும்பான்மையும் நீடிக்காது என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீதான நம்பிக்கையை நாட்டு மக்கள் இழந்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் 1946ஆம் ஆண்டு உதயமான ஐக்கிய தேசியக்கட்சி, 1951ஆம் ஆண்டு உருவான சுதந்திரக்கட்சி ஆகியன இன்று நாட்டு மக்களின் மனங்களில் இருந்து நீங்கிவிட்டன. மக்கள் மாறவில்லை. ஆனால் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

புதியதொரு அரசியல் கட்சியே தற்போது நாட்டை ஆள்கின்றது. பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதும் புதிய கட்சியே. ஆனால் மொட்டு அரசுக்கு தற்போது இருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் எதிர்காலத்தில் இருக்குமா என்பதனை கூறமுடியாது. மஹிந்தவை தோற்கடிக்கவே முடியாது என்றனர். 2015இல் என்ன நடந்தது? கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியானபோது நாட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை இன்று இல்லாமல்போயுள்ளது. ஊழல்கள் இடம்பெற ஆரம்பித்துள்ளன. புதிதாக இரண்டு அமைச்சுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வமைச்சுகளுக்கு நிதிகூட ஒதுக்கப்படவில்லை. எனவே, நாடு குறித்து சிந்திக்காமல் அரசியல் ரீதியிலேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பொருளாதார தரவுகளும் மறைக்கப்

# 51 பகுதிகள் தனிமைக்குள்

கொழும்பு, டிசெ. 12

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் 7 மாவட்டங்களிலுள்ள 51 பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 18 பிரதேசங்களும், கம்பஹா மாவட்டத்தில் 11 பிரதேசங்களும், களுத்துறை மாவட்டத்தில் 7 பிரதேசங்களுமாக மேல் மாகாணத்தில் 35 பிரதேசங்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், கண்டி மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், புத்தளம் மாவட்டத்தில் 5 பிரதேசங்களும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதே சமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# ஜனநாயக பன்மைத்துவ இலங்கை இந்திய நலனுடன் தொடர்புபட்டது

### *இந்தியத் தூதர் பாக்லே வலியுறுத்தல்*



கொழும்பு, டிசெ. 12

ஒரு பிரிக்க முடியாத, வலுவான, பாதுகாப்பான ஜனநாயக பன்மைத்துவ இலங்கை என்பது இலங்கையின் நலனுக்கு அப்பால் இந்தியாவின் நலனுடன் தொடர்புபட்டது என இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெருக்கமான அயல்நாடு என்ற அடிப்படையிலும், கடல்சார் சகா என்ற அடிப்படையிலும் ஒரு பிரிக்க முடியாத, வலுவான பாதுகாப்பான ஜனநாயக பன்மைத்துவ இலங்கை என்பது இலங்கையின் நலனுக்கு அப்பால் இந்தியாவின் நலனுடன் தொடர்புபட்டது.

இலங்கையை வலுப்படுத்துவதை முக்கியமானதாக இந்தியா கருதுவதற்கான காரணத்தை இது வலுப்படுத்துகின்றது. இந்த பெரும்தேசத்தின் மக்கள் அனைவரும் தங்களின் நியாயபூர்வமான அபிலாசைகளின் அடிப்படையில் முன்னேறுவதை உறுதி செய்வதில் நாங்கள் எங்கள் பங்களிப்பை வழங்கத் தயாராகவுள்ளோம்.

தமிழர்கள் உட்பட அனைவரதும் அமைதி, சமாதானம், செழிப்பு ஆகியவை குறித்த அபிலாசைகளை இலங்கையால் அடையமுடியும். போரின் பின்னர் தனது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்த இந்தியா தற்போது அனைத்துப் பகுதிகளிலும் அதனை முன்னெடுக்கின்றது - என்றார். (ம-இ)

# மாகாணசபைத் தேர்தலிலும் 'கெத்து' காட்டுவார் கோத்தா

கொழும்பு, டிசெ. 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சமீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மாகாணசபைத் தேர்தலின்போதும் உறுதிப்படுத்தப்படும் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சமீது நாட்டு மக்களுக்கு தற்போது நம்பிக்கையில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேவால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சமீது நாட்டு மக்கள் முழுமையாக நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கையில் எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. நல்லாட்சியின்போது மாகாணசபைகள் குழி தோண்டி புதைக்கப்பட்டன. அந்த மாகாணசபைகளை மீள இயக்கும் தேர்தல் நடைபெறும்போது ஜனாதிபதிமீது நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மீண்டும் வெளிப்படும். மக்கள் நீதிமன்றம் ஊடாக சிறப்பான முடிவு வழங்கப்படும்' என்றார். (ம-44)

# சிறைச்சாலைக் குறைபாடுகளுக்கு தீர்வுகளை உடன் மேற்கொள்ளுக!

- போதைப் பாவனையாளருக்கு புனர்வாழ்வு
- பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதி செயலணி

அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு,டிசெ.12

**சிறைச்சாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்வுகளை பரிந்துரைக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானதால் 12 ஆயி ரத்துக் கும் மேற்பட்டோர் சிறையில் உள் ளனர்.

அவர்கள் தொடர்பில் விசேட கவ னம் செலுத்தி புனர்வாழ்வு திட் டத்தை வகுக்க வேண்டியதன் அவ சியத்தையும் ஜனாதிபதி வலியுறுத் தியுள்ளார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலு வலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனா திபதி இதனை தெரிவித்தார்.

மேலும், சிறைச்சாலைகளுக்குள் இருக்கும் நெரிசலைக் குறைக்க தற்போது அடையாளம் காணப்பட் டுள்ள இடங்களில் முன்பே பொருத்தப்பட்ட முறையிலான சிறைச்சாலைகளை அமைப்பதற் கான சாத்தியத்தை ஆராயுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கி னார். வெளிநாடுகளில் உள்ள சிறைச்சாலைகளின் மாதிரிகளை ஆராய்ந்து, வசதிகளை வழங்க உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை ஜனா திபதி வலியுறுத்தினார்.

சுங்கத் திணைக்களம், பொலிஸ், சிறைச்சாலைகள் மற்றும் புனர் வாழ்வு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இணைந்து ஜனாதி பதி செயலணியொன்றை நிறுவி தற்போதுள்ள பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி னார். (ந)



“இது உங்கள் கடற்படை” மற்றும் ‘உங்கள் கடற்படையை அறிந்து கொள்ளுங்கள்’ என்ற கருப்பொருளில், கடற்படையின் 70 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு காலி முகத்திடல் கடலில் கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன. இக் கப்பல்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என கடற்படை தெரிவித்துள்ளது. (ந)

## தேர்தல் நோக்கம் எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை

**மோசடி செய்யோம் என்கிறார் மகிந்த**

கொழும்பு, டிசெ.12

தேர்தலை எதிர்பார்த்து எந்தவொரு விடயமும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. அந்த மோசடிச் செயலை மக்களுக்கு நாம் செய்ய மாட்டோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித் துள்ளார். வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான விவாதத்தின்போது, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பட்ஜெட்டை நாம் முன்வைக்கும் போது 70 பில்லியன் ரூபாவை கொரோனாத் தொற்றுக்கென செலவிட்டி ருந்தோம்.

பட்ஜெட்டில் மூன்றாவது வாசிப்பு இடம்பெறும் இன்று (நேற்று முன்தினம்) 82 பில்லியன் ரூபாவை கோவிட் ஒழிப்புக்காக செலவிட்டுள்ளோம். டிசெம்பராகும்போது அது 90 பில்லியனை விட அதிகமாகும். அதனால் இது போன்ற பாரிய சவால்களை ஏற்றுக்கொண்டு முன்வைக்கப்படும் வரவு- செலவுத் திட்டமாக இதனை குறிப்பிட வேண்டும்.

நாம் நமது பொருளாதாரத்தை தேசிய மட்டத்தில் கட் டியெழுப்பியிருந்தால் இதுபோன்ற நெருக்கடி களுக்கு முகங்கொடுக்கக் கூடியதாயிருந்திருக்கும். அதனாலேயே சுபீட்சத்தின் நோக்கு தேசிய பொருளா தாரம் தொடர்பிலும், தேசிய விவசாய வளர்ச்சி தொடர் பிலும் சிந்தித்துள்ளோம் என்றார். (வ-இ)

## மலையக பல்கலைக்கு கொட்டகலையில் இடஒதுக்கீடு

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ.12

மலையகத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடம் கொட்டகலையில் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மலையக புத்திஜீவிகளுடன் கலந்துரை யாடி பாடத்திட்டங்கள் தொடர்பில் முடிவெடுக்கப்படும். என்று இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனவரி மாதம் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் அறிவித்துள்ளனர். எனவே கிடைக்கும் என நம்புகின்றோம். தற்போதைய சூழ்நிலையால் தான் இழுபறி நிலைமை ஏற்பட்டுள் ளது என்றாலும் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. ஆயி ரம் ரூபாவைவிட அதிக சம்பளம் கிடைக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். மலையகத்துக் கான இந்திய வீட்டுத்திட்டம் ஜனவரியில் ஆரம்பிக்கப் படும். அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நில ஒதுக்கீடு உள்ளிட்ட ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனவரியில்தான் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும். அரைகுறையாக உள்ள வீடுக ளைச் சீரமைப்பதற்கும் வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மலையகப் பல் கலைக்கழகத்துக்கான இடம் கொட்டகலை ரொசீட்டா பாம் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளது. என்றார். (ப)



## பரபரப்பிலும் ஒரு கிளுகிளுப்பு

வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது நாடா ளுமன்றத்தில் நடத்தப்பட்ட ஸ்னூக்கர் போட்டி யில் (வண்ணப் பந்துகள் கொண்டு மேசை மீது ஆடும் ஆட்டம்) ஸ்ரீலங்கா பொது ஜன பெர முனவின் எம்.பி வைத்திய கயஷான் நாணயக் கார மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி நளின் பண்டார ஆகிய இருவரும் வெற்றியா ளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இணை வெற்றியாளர்களுக்கான கேடயத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச வழங்கினார். இங்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் பிரசன்ன மாகியிருந்தனர். (ந)

## ‘மாஸ்க்’ அணியாத 41 பேர் கைது

கொழும்பு, டிசெ.12

முகக்கவசம் அணியாத மற்றும் சமூக இடைவெ ளியைப் பேணாத 41 பேர், 24 மணித்தியாலங் களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் இதுவ ரையான காலப் பகுதியில் ஆயிரத்து 256 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித் துள்ளார். (ந-இ)

## அக்கரைப்பற்றில் சிசுவுக்கு தொற்று

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் 9 மாத சிசுவும் 75 வயது வயோதிபரும் கொரோ னாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, கல்முனைப் பிராந்தியத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 350ஆக உயர்ந்துள்ளது என பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரி வித்தார். (வ-இ)

## அடையாளம் காணப்பட்டன மஹர கைதிகளின் சடலங்கள்

கொழும்பு,டிசெ.12

மஹர சிறைச்சாலையில் உயிரி ழந்த 11 கைதிகளதும் சடலங்கள், அவர்களது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், சடலங்கள் மீதான பிரேத பரிசோதனைகள் நீதிமன்ற உத்த ரவின் பிரகாரம் முன்னெடுக்கப் பட வுள்ளன. உயிரிழந்த கைதிக ளில் மினுவங்கொடவைச் சேர்ந்த இருவர், பியகம பகுதியைச் சேர்ந்த இருவர் உள்ளடங்குகின்றனர்.

ஏனைய ஏழு பேரும் ஜாஎல, என் டேரமுல்ல, வெலிவேரிய, அங்கு ருவாத்தோட்ட, வத்தளை உனுபிட் டிய, களனி மற்றும் சப்புகஸ்கந்த பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

உயிரிழந்துள்ள அனைத்து கைதி களும் போதைப்பொருள் குற்றங் கள் தொடர்பில் கைதுசெய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டவர்கள் எனத் தெரிவித்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரி வினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுகாதாரப் பேரிடர் நிலை !

புரேவிப் புயலோடு பொழிந்த மழையால் உண்டான வெள்ளம் இன்னும் வடிந்தபாடில்லை. பல இடங்களில் கிணறுகளைக்கூட வெள்ளம் மூடிவிட்டது. அதைவிட வீதியில் தேங்கியிருக்கும் வெள்ளத்தினூடாகப் பயணிப்பதால் தோல், சேற்றுப்புண் என்பன ஏற்படும் அபாயமும் உள்ளது என்று எச்சரித்துள்ளது மருத்துவத்துறை. நிகழ்காலப் பேரிடருடன் தொடர்புள்ள எச்சரிக்கை இது. அசண்டை செய்யாமல் இருந்தால் வெந்த புண்ணில் வேல் பாய்வதைப்போன்று வெள்ளத்துக்குப் பின்னரான இன்னுமொரு இடரையும் நாம் சந்திக்க வேண்டி வரும்.

இதுமட்டுமல்ல இன்னும் ஏராளமான சுகாதாரப் பொறிமுறைகளை அடுத்துவரும் காலங்களில் நாம் பின்பற்ற வேண்டியிருக்கின்றது. மழை காலத்தில் பொதுவாகவே மாசடைந்திருக்கும் தண்ணீர் அண்மையில் ஏற்பட்ட இந்த வெள்ளப் பேரிடரால் இன்னும் மாசடைந்திருக்கும். இதனால் அனைவரும் தண்ணீரை கொதித்தாற வைத்து அருந்த வேண்டும். நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் என்பன ஏற்படாமல் இருப்பதைத் தவிர்க்கும் பொறிமுறை அது என்பதை உணர்வோம். அதிலும் குழந்தைகள் முதியவர்களிடம் கூடுதல் கவனமாக இருப்போம். கிணற்றிலுள்ள தண்ணீரின் கொள்ளளவுக்கு ஏற்ப குளோரின் இட்டு தண்ணீரைப் பயன்படுத்தவேண்டும் என்று சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது. பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கு அமைய குளோரினின் அளவுகளைத் தீர்மானித்து இந்த எச்சரிக்கையை நடைமுறைப்படுத்தினால் அதுவும் சிறப்பாகவே இருக்கும்.

சிறுமழை பெய்தாலே டெங்கு தாண்டவம் ஆடுவது வழமையானது. ஒவ்வொரு வருடமும் இது வழமையே. இந்த வருடம் பெய்த கடும் மழையை அடுத்து வெள்ளம் வழிந்தோட இடமின்றி ஒரிடத்தில் அதிக நாள்கள் தேங்கி நிற்பதை பரவலாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. டெங்குத் தாக்கம் இனிவரும் வாரங்களில் அதிகரிக்கலாம் என்ற மறைமுக எச்சரிக்கையையே இது தருகின்றது. வீதிகள், பொது இடங்கள் என்பன எம் சக்திக்கு அப்பால்பட்ட விடயமாக இருந்தாலும் வீடுகளில் தேங்கியிருக்கும் வெள்ளத்தை எம்மால் சிறப்பாகவே கையாள முடியும். ஒவ்வொருவரும் தத்தம் சூழலைச் சுத்தமாக வைத்திருந்தாலே டெங்கின் தாக்கத்தை பாதியாகக் குறைத்துவிட வாய்ப்புண்டு.

இந்த வருடம் முழுவதுமே கொரோனா ஊழித்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கின்றது. எங்கு, யாருக்கு, எந்தநேரத்தில் தொற்று ஏற்படும் என்று சொல்லமுடியாத நிலை. எங்கோ ஒருவருக்கு ஏற்பட்ட தொற்று தற்போது எம் நெருங்கிய உறவுகளுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எமக்கு நன்கு தெரிந்தவர்கள்கூட தனிமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானித்திருப்பீர்கள். கொரோனா கொடியதுதான் ஆனால் கொரோனாவால் மட்டும் இறந்தவர்கள் என்று இதுவரை எவரும் இல்லை. ஏற்கனவே இருந்த நோய்களின் தீவிரத்தன்மையை கொரோனா இரட்டிப்பாக்கி அல்லது மேலும் அதிகரித்தே இந்த இறப்புக்கள் இலங்கையில் நிகழ்ந்துள்ளன. ஆக, கொரோனா என்ற பேரரக்கனை எதிர்கொள்வதற்கு டெங்கு, நெருப்புக்காய்ச்சல் போன்ற அரக்கர்களிடம் இருந்து நாம் தூரமாக இருக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம் என்பது இந்த வருடத்தின் கூடுதல் தலையிடி.

இவையெல்லாம் காலாதி காலமாகச் சொல்லப்படுவதுதான். வழக்கம்போல புறக்குடத்து நீர்போல இந்த வருடத்துக்கான மழைக்கால எச்சரிக்கையையும் கண்டும் காணாமலும் இருந்துவிடாதீர்கள். கொஞ்சம் காதுகொடுத்து கேட்டு அதன்படி ஒழுகுங்கள். ஏனெனில் இந்த வருடத்தில் நாம் டெங்குடன் மட்டும் போராடிக் கொண்டிருக்கவில்லை. கொரோனா என்ற கொடியவனும் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கின்றான். முறியடியுங்கள், மூழ்கிவிடாதீர்கள்!.

# இலங்கை அமைச்சரவையில் மூவரில் ஒருவர் குற்றவாளி

## சர்வதேச ஆய்வு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.12

**இலங்கை அமைச்சரவை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர், ஊழல், மோசடி அல்லது கொலைக் குற்றச்சாட்டுகளை எதிர் நோக்கியுள்ளவர்கள் என்று சர்வதேச அளவிலான ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.**

சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிக்கும் வகையில், ஒரு அதிகாரி மீது குற்றம் சுமத்தப்பட்டால், அவர் அரசின் மிக உயர்ந்த பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் தனது குற்றமற்ற தன்மையை நிரூபிக்க வேண்டும்" என அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், தென்னாபிரிக்காவின் ஜொஹன்னஸ்பர்க்கில் இருந்து அறிக்கை ஒன்றின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் "இந்த அமைச்சர்களில் பத்து பேர், முன்னைய ஆட்சியின் போது அவர்கள் அரசியல் பழிவாங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். இது பிரச்சினையில்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம் நீதித்துறை முறையையும் பொறுப்புக்கூறலை ஆதரிக்கும் நிறுவனங்களையும் மீறுவது குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நிறுவனங்களுக்குப் பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும், முதலீட்டாளர்களின் நம்பிக்கை குறைந்து வருகிறது என்பதை நினைவில் கொள்வதும் நல்லது" என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ- இ)

## உ.ப.தலைவர் பதவியை பயன்படுத்த முடியாது

### அரவிந்தனுக்கு ஆனந்தசங்கரி செக்.

யாழ்ப்பாணம், டிசெ. 12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் அரவிந்தனுக்கு கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் வி. ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

சமீப காலமாக எமது கட்சி உறுப்பினர் ச.அரவிந்தன் தலைமைக்கு எதிராகவும், கட்சியின் கட்டுப் பாடுகளையும், ஒழுங்கு விதிகளையும் மீறியும் செயற்பட்டு ஊடகங்களுக்கு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். சிரேஷ்ட உபதலைவர் என்ற பதவி அவருக்கு வழங்கவில்லை என்பதை, அடிக்கடி அறிவுறுத்தியும் அதனை செவிமடுக்காமல் தொடர்ந்தும் அந்த பதவிப் பெயரையும் பயன் படுத்தி, ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடுகின்றார்.

விரைவில் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டி, அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக ஒழுங்கு நடவடிக்கை குழுவை அமைத்து அவர் மீது விசாரணை மேற்கொண்டு தீர்மானம் எடுக்கும் வரை அவர் தொடர்ந்து கட்சி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இன்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இடைக்காலத் தடை விதிக்கப்படுகின்றது என்றுள்ளது. (ப)

### உயிரிழந்த துறவி;

## விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

கொழும்பு, டிசெ. 12


தென்னிலங்கையின் காலி பிரதேசத்தில் கால்வாய் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட நெதர்லாந்து நாட்டு பௌத்த பிக்கு தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பொலிஸ்மா அதிபருக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே அந்தப் பிக்கு தொடர்பில் பொலிஸ் மா அதிபரால் பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் கொலைசெய்யப்பட்ட பௌத்த பிக்கு தியானப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த பிரதேசத்தில் தங்கியுள்ள ஏனைய வெளிநாட்டு பௌத்த பிக்குகளிடமும் வாக்குமூலங்களும் பெறப்பட்டிருக்கின்றன. (ப)

### சாரதிக்கு கொரோனா

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு பூட்டு



கொழும்பு, டிசெ.12

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பத்திரமுல்லையில் உள்ள பிரதான அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அலுவலகத்தில் பணிபுரியும் சாரதிக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து வேலைவாய்ப்பு பணியகத்தில் பணிபுரியும் ஏனைய 50 சாரதிகள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சேவைகளைப் பெற 0112880500 எனும் 24 மணிநேர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

## சிறுவனுக்கு எமனான கோவில் மணிக்கயிறு

ஹற்றன்.டிசெ.12
கோவில் மணிக்குக் கட்டப்பட்டிருந்த கயிறு இறுகியதில், 7 வயதுச் சிறுவனொருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம், டிக்கோயா டங்கன் தோட்டத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
சிறுவன், கோவில் வளாகத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். இதன்போது கோவில் மணிக்கு கட்டப்பட்டிருந்த கயிறு சிறுவனின் கழுத்தை இறுக்கியதால், சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்படுகிறது.
மஸ்கெலியா மாவட்ட மருத்துவமனையில் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## மக்காச் சோளத்தில் மீண்டும் படைப்புழு

கொழும்பு,டிசெ.12
மக்காச் சோளத்தில் மீண்டும் படைப்புழுத் தாக்கம் ஏற்பட்டுள்ளது.
அநுராதபுரம் மாவட்டத்தில் பலுகஸ்வேவா பிரதேச செயலக பிரிவில் உள்ள ஹோரிவில உள்ளிட்ட பல கிராமங்களில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது.
இங்கு ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளத்தில் படைப்புழுத் தாக்கம் ஏற்பட்டுள்ளது.
படைப்புழு தாக்கம் தொடர்பில் விவசாயத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## தாயாரின் மரணச் சடங்கில் பங்கேற்றவருக்கு கொரோனா

கொழும்பு.டிசெ.12
தாயாரின் மரணச் சடங்கில் பங்குபற்றிய, பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கம்பளையைச் சேர்ந்த 46 வயதுடைய பெண் ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
குறித்த பெண் கொழும்பு களனி பகுதியிலுள்ள தேயிலை தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்துள்ளார். அங்கு கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகியவர் என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டார். அவருக்கு பி.சி.ஆர். சோதனையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
இந்த நிலையில் தாயார் இறந்த செய்தி கேட்டதும், சுகாதார பிரிவினருக்கு அறிவிக்காமல் தனது கணவருடன்,மரணச் சடங்கில் பங்கேற்றார்.
தற்போது பெண்ணுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை மரணச்சடங்கில் மூன்றுக்கும் அதிகமான தோட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பங்குபற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-ரி4)

# எதையாவது தாருங்கள் எனும் நிலையில் தமிழ்த் தலைமைகள்

### கூட்டமைப்பைச் சாடினார் ஆனந்தசங்கரி

**கிளிநொச்சி, டிசெ.12**

**சமஸ்டியை எதிர்த்த தமிழ்த் தலைவர்கள் இன்று எதையாவது தாருங்கள் என கோருமளவுக்கு வந்துவிட்டனர். இது வேடிக்கையான விடயம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
தமிழ் மக்களது இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு இப்போது இருக்கின்ற தமிழ்த்தலைமைகள் எவ்விதமான முயற்சியையும் முன்னெடுக்கவில்லை. எக்காலங்களிலும் இவர்கள் அதை எடுக்கப்போவதில்லை. சமஸ்டித் தீர்வைக் கூட காலம் காலமாக எதிர்த்தவர்கள் இப்போது எதையாவது தாருங்கள் என்று கேட்பது வேடிக்கையான விடயம். தமிழ் மக்களுக்கான பிரச்சினைக்குத் தீர்வாக 1949ஆம் ஆண்டிலேயே சமஸ்டி பற்றிப் பேசப்பட்டது. காலப்போக்கில் சமஸ்டி முறையிலான தீர்வை வழங்குவதற்கு சிங்களத் தலைவர்களும் சிங்கள மக்களும் இணங்கியிருந்தார்கள்.
குறித்த காலப்பகுதியில் ரணில் விக்ரமசிங்க சமஸ்டித் தீர்வை முன்வைத்து தேர்தலில் களமிறங்கினார். ஆனால் தமிழ் தலைமைகள் அவருக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர். ரணில் விக்ரமசிங்க ஒரு லட்சம் வாக்குகளால் தோல்வியடைந்தார். அப்போது சமஸ்டி கிடைத்திருந்தால் இன்று 10 ஆண்டுகளுக்கு மேல் சமஸ்டித் தீர்வு கிடைத்திருக்கும் என்றார். (ப-6)

## அரசின் பொருளாதாரத் திட்டம் வானத்தில் கட்டப்பட்ட மாளிகையே

### ஹர்ச டி சில்வா எம்.பி கிண்டல்



கொழும்பு, டிசெ.12
அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டம் என்பது வானத்தில் கட்டப்பட்ட மாளிகை மாத்திரமே. அவர்கள் செய்வது என்ன என்று அவர்களுக்கே தெரியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.
வரவு-செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தின் பின்னர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்துக்கு வெளியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
தமக்குப் பிரச்சினை யில்லை, கடன்களைச் செலுத்த முடியும் என அரசாங்கத்தினர் கூறுகின்றனர். டொலர்களில் கடனைச் செலுத்தி விட்டு பணத்தை அச்சிடப் போகின்றோம் எனக் கூறுகின்றனர். இவை வானத்தில் கட்டும் மாளிகை மாத்திரமே. வருத்தமாக இருக்கின்றது. இவர்களின் வேலைத்திட்டம் இவர்களுக்கே தெரியாது - என்றார். (ப)

## வெடிகுண்டுடன் மூவர் கைது

ஹற்றன்,டிசெ.12

துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 10 ரவைகள் மற்றும் கற்களை உடைக்கப் பயன்படுத்தும் வெடிகுண்டு 12 என்பவற்றுடன், மூன்று சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.
நுவரெலியா இராகலை புரூக்சைட் பகுதியில் இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிபடையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் இராகலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மூவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கந்தசாமி கோவில் உண்டியல் உடைப்பு

கிளிநொச்சி,டிசெ.12
கிளிநொச்சி ஏ-9 வீதியில் அருகிலிருக்கும் கந்தசுவாமி ஆலய உண்டியல் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு அதில் இருந்த ஒரு தொகை பணம் களவாடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ-35)

## அனர்த்த பாதிப்பு விவரம் திரட்டல்

சாவகச்சேரி,டிசெ.12
தென்மராட்சி பிரதேசத்தில் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்டவை தொடர்பான விவரங்கள் பெறப்படுகின்றன.
கிராமமட்ட வெளிக்கள அலுவலர்களுடன், பட்டதாரி பயிலுநர்களும் களமிறக்கப்பட்டு விவரங்கள் பெறப்படுகின்றன.
புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிப்புக்கு உள்ளானதுடன் பிரதேசத்தில் உள்ள குடியிருப்புகள், நெல் வயல்கள், விவசாய நிலங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் அழிவுகள் தொடர்பான விவரங்கள் இதன்போது சேகரிக்கப்படுகின்றன. (ஜ-9)

## கொரோனா அச்சுறுத்தலிலும் 700 பேருக்கு ஒரேநாளில் உரம்

### விவசாயிகள் விசனம்

கிளிநொச்சி, டிசெ.12
கொரோனா அச்சுறுத்தல் உள்ள நிலையில், ஒரே நாளில் 700 விவசாயிகள் அழைக்கப்பட்டு, அவர்களுக்கு மானிய உரம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து அந்த விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் நேற்று உரவழங்கல் இடம்பெற்றுள்ளது.
பரந்தன், குமரபுரம், உமையாள்புரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த 700 விவசாயிகள் இவ்வாறு அழைக்கப்பட்டனர் என்றும், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சிலர் தமக்கு வேறு நாள்களை மாற்றித்தரும்படி கேட்டபொழுது குறித்த தினத்திலேயே அதைப் பெற்றுக்கொள்ளும்படி உத்தியோகத்தர்களால் கூறப்பட்டது என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். (ப-113)

## போதையில் சாரத்தியம்: நால்வருக்குத் தண்டம்

சாவகச்சேரி,டிசெ.12
போக்குவரத்து விதிமுறைகளை மீறி, மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு, தலா 25 ஆயிரம் ரூபா வீதம், ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார், மதுபோதையில் வாகனம் செலுத்தினர் எனக் குற்றஞ்சாட்டி நால்வருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்தனர்.
சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
விசாரணையில் வாகனம் செலுத்தியோர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

# தமிழர்களின் வீடுகளைக் கொளுத்த அரசுக்கு ஒத்தோடிகள் கொள்ளிக் கட்டை

## விழிப்புடன் இருக்குமாறு வவுனியா பிரஜைகள் குழு கோரிக்கை

வவுனியா, டிசெ.12
சிங்கள பௌத்த பெருந் தேசிய வாதத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்தோடி, தமிழர் வீட்டைக் கொழுத்த கொள்ளிக்கட்டை எடுத்துக் கொடுத்து சிற்றின்பம் காணும் தென்னிலங்கை கட்சிகளின் முகவர்களின் நாசகார அழிவு நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபை விவகாரம் குறித்து அவர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

கொழும்பு மத்திய அரசாங்கமோ, உள்ளாட்சி சபைகளுக்கு என்று ஏலவே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அந்தந்த பிரதேசங்களுக்குட்பட்ட மக்கள் முழுமையாக அனுபவித்துவிடாமல், எப்படி வஞ்சிக்கிறது? எப்படி கபளீகரம் செய்கிறது? எப்படி துஷ்பிரயோகம் செய்கிறது? எப்படி தடை போடுகிறது? என்பதனை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்துவதும், பறிக்கப்படும் உரிமைகளுக்காக போராடுவதும் தான் வலி.

இவற்றை அம்பலப்படுத்துவதான் கிழக்கு பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் நோக்கமாக இருக்கிறது.

நீங்கள் வாக்களித்து தெரிவு செய்த தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பிரதேசவாசி களான உங்களது நலன் நோக்குநிலையிலிருந்து எடுக்கும் இத்தகைய நல்லெண்ண முயற்சிக்கு முழுமையான ஆதரவை நீங்கள் வழங்குங்கள்.

தமிழ் மக்களை தமிழ்த் தேசியத்தின் பெயரால் திரளாக்க விடாமல் சாதி ரீதியாக, மத ரீதியாக, பிரதேச ரீதியாக பிளவு படவைத்து குறும் குழுவாத உதிரிகளாகவே வைத்திருக்க நினைக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்தோடி தமிழர் வீட்டைக் கொளுத்த கொள்ளிக் கட்டை எடுத்துக் கொடுத்து சிற்றின்பம் காணும் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட தென்னிலங்கை கட்சிகளின் முகவர்களின் நாசகார அழிவு நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்பு நிலையில் இருந்து, தோற்றுப் போகாத சமரசம் இல்லாத தமிழ்த் தேசியம் காக்கும் பணியில் பற்றுறுதியுடன் தொடர்ந்தும் பயணிக்குமாறு தமிழீழ மக்களை வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு கேட்டுக்கொள்கின்றது என்றுள்ளது. (ப)

---

## பெறப்பட்டன மாதிரிகள்

கொழும்பு, டிசெ.12
உயிரிழந்த நிலையில் ரத்கமவில் மீட்கப்பட்ட டச்சு நாட்டுத் துறவியின் உடலிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் நீதித்துறை மருத்துவ அதிகாரிக்கு தேரரின் எச்சங்கள் குறித்து பிரேத பரிசோதனை நடத்துமாறு நீதிவான் உத்தரவிட்ட நிலையிலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் ரத்கம பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த துறவி காணாமல்போனதாக அளிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய கடந்த செவ்வாய்க்கிழமை ரத்கம பகுதியில் அமைந்துள்ள களப்பொன்றில் கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். தேரரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக காலி, கராபிட்டிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ப)

---

*ஜனாஸா விவகாரம்;*

# அரசை எதிர்க்க முஸ்லிம்கள் முடிவு!



கொழும்பு,டிசெ.12
கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தகனம் செய்யும் விவகாரத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்ப்பை வெளியிடத் தொடங்கியுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

உறவினர்களால் உரிமை கோரப்படாத சுமார் 20 சடலங்கள் தகனம் செய்யப்பட உள்ளன என ஆங்கில பத்திரிகை யொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது முஸ்லிம் சமூகத்தின் எதிர்ப்பு நடவடிக்கையாக நோக்கப்பட வேண்டும்.

விஞ்ஞானபூர்வமான ஆதாரங்கள் எதுவுமின்றி ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதி மறுக்கப்படுகிறது.

இவ்வாறான நிலைமைகள் அரசாங்கத்துக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த நாட்டுக்கும் நல்லதல்ல.

எவ்வித தாமதமும் இன்றி ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ-இ)

---



## சமாதான நீதிவானாக பதவியேற்பு

கொடிகாமம், டிசெ. 12
மீசாலை மத்திய கல்லூரியின் அதிபராகவும், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற குமாரசாமி சிவானந்தம் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவி யேற்றார். (ப-159)

---

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டு சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. புரேவி புயல் மற்றும் மழை காரணமாக மரக்கறி தோட்டங்கள் அழிவடைந்துள்ளன.

தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பிரதேசத்தில் அதிகளவான காய்கறித் தோட்டங்கள் அழிவடைந்துள்ளதாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் உள்ளூர் மரக்கறிகளுக்கு பதிலாக தென்னிலங்கையில் இருந்தே மரக்கறிகள் சந்தைகளுக்கு வந்து சேர்கின்றன.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு வாங்கும் மரக்கறிகள் தற்போது 5ஆயிரம் ரூபாவுக்கு வாங்க வேண்டியுள்ளன என சைவ உணவகங்களை நடத்துவோர் தெரிவித்துள்ளனர். (ஐ-9)

---

## நகர சொகுசு பஸ் சேவை ஜனவரி முதல் கண்டியில்

கொழும்பு, டிசெ.12
கண்டியில் சகல வசதிகளுடன் கூடிய நகர சொகுசு பஸ் சேவை ஜனவரி முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முதல் முறையாக கண்டி மாகும்புர பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படும் இந்த பஸ் சேவை எதிர்காலத்தில் நாடு முழுவதும் செயற்படுத்தப் படும்.

தனியார் வாகனம் மூலம் வாகன நிறுத்துமிடத்துக்கு வரும் மக்கள் அங்கிருந்து குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் மூலம் நகரத்துக்கு சென்று, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து விட்டு மீண்டும் குறித்த இடத்துக்கே செல்வதற்கான வசதிகள் இந்த சேவை மூலம் ஏற்படுத்தப் பட்டுள்ளது - என்றார். (ஐ-இ)

---



*சூழலைப் பாதுகாக்கும்*

## குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்


ஊர்காவற்றுறை,டிசெ.12
டெங்கு நுளம்பு பரவாமல் தங்களது வீட்டையும் சுற்றுச்சூழலையும் சுத்தமாக வைத்திருக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படும் என்று கியூமெடிக்கா நிறுவன திட்ட இணைப்பாளர் ந.நல்லசிங்கம் தெரிவித்தார்.

ஹியூ மெடிக்கா சர்வதேச தொண்டு நிறுவனத்தால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஊர்காவற்றுறை பிரதேச மக்களுக்கு நேற்றுமுன்தினம் நுளம்பு வலைகள் மற்றும் போர்வைகள் என்பன வழங்கப்பட்டன. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ - 20)

---

# கொழும்பில் ஆபத்து குறையவேயில்லை!

## மாநகர முதல்வர் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ.12
கொழும்பில் இன்னும் ஆபத்துக் குறையவில்லை, கொழும்பு நகரத்துக்குள் மாத்திரம் 79 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களுக்கு ஏனைய நோய்த் தாக்கங்கள் இருந்துள்ளதால் ஏதேனும் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியிருப்பவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனை மற்றும் தேவையான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (ப)

# உணவங்களில் உணவுகளை தனித்தனியாகப் பெறுங்கள்

## அரச, தனியார் ஊழிர்களுக்கு சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

**கொழும்பு, டிசெ.12**

**அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள், சிற்றுண்டிச்சாலையில் உணவு பெறும் போது தனித் தனியாக பெற்றுக் கொள்வது மிகவும் முக்கியம் என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பிரதானி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நிறுவனங்களில் ஒன்றாக உணவு பெறும்போது உணவின் ஊடாக கொரோனா வைரஸ் தொற்று ஆரோக்கியமானவருக்கு பரவக் கூடும்.

உணவகங்கள் போன்ற இடங்கள் திறக்க அனுமதிக்கப்படவில்லை, மேலும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளக்கூடியவர்களின் எண்ணிக்கை 50ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான இடங்களில் மக்கள் ஒன்றுகூடுவது கொரோனாத் தொற்று பரவக் காரணமாகிவிடும்.

உணவு உட்கொள்ளும்போது முகக்கவசத்தை நீக்குவதால் ஒன்றாக இணைந்து உணவு பெற வேண்டாம். நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் ஊழியர்கள் உணவு பெறும் போது கடைபிடிக்க வேண்டிய சுகாதார முறை ஒன்றைத் தயாரிக்க வேண்டும். எதிர் வரும் வருடத்தின் மத்திய பகுதியில் ஏதாவது ஒரு தடுப்பூசி கிடைக்கும். அது வெற்றியளிக்கும் வரையில் தடுப்பூசி தொடர்பான நிலைப்பாட்டுக்கு வர முடியாது - என்றார். (ப)

## இடைத்தங்கல் முகாம்களில் தொற்று நீக்கல்

சாவகச்சேரி,டிசெ.12

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் இடைத்தங்கல் முகாம்களாகப் பயன்படுத்தப்பட்ட பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்களில் தொற்று நீக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அங்கு தங்கியிருந்த மக்கள் வீடுகளுக்குத் திரும்பியதை அடுத்து, சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கிருமித் தொற்று நீக்கல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

கோயிற்குடியிருப்பு, நுணாவில் மேற்கு ஆகிய பிரிவுகளில் இயங்கிய இடைத்தங்கல் முகாம்களுக்கு நகரசபையும், சந்திரபுரம், கொடிகாமம் தெற்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு ஆகிய பிரிவுகளில் இயங்கிய இடைத்தங்கல் முகாம்களுக்கு பிரதேச சபையினரும் பங்களிப்பு வழங்கினர்.

இந்த முகாம்களில் 77 குடும்பங்களைச் சேர்ந்த 287 பேர் தங்கியிருந்து, வீடுகளுக்குத் திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## இலங்கையில்
## வீட்டுக்குருவி இனம் மிக வேகமாக அழிவு

கொழும்பு, டிசெ.12



கடந்த காலங்களில் வீடுகளில் கூடுகட்டி வாழ்ந்த குருவி இனம் (house sparrow) தற்போது மிக வேகமாக அழிந்து வருகின்றது என சுற்றாடல் மற்றும் ஜீவகாருண்ய அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

வீட்டுக் கூரைகளில் வாழ்ந்து வீடுகளுக்கு வசந்தத்தைக் கொண்டு வந்த இந்த குருவி இனம் தற்போது வீடுகளில் இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு இலங்கையில் முற்றாக அழிந்து விடும் அபாயம் நிலவுகிறது.

நவீன பயிர்ச் செய்கை முறைமையும், இரசாயன பூச்சி கொல்லி மற்றும் கிருமி நாசினி பாவனைகள் அதிகரித்தமையுமே இதற்கான காரணமாகும்.

இரசாயன பதார்த்தங்கள் சேர்க்கப்பட்ட விதைகள், பயிர்கள் வளர்ந்த பின் பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்ட வளர்ந்த பயிர்களின் பூக்கள், இலைகள் மற்றும் விதைகளை உணவாக உட்கொள்வதால் இவை அழிவடைந்து வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-இ)

## பதிவு செய்யப்படாத ஓட்டோக்கள்; விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை

வவுனியா, டிசெ12

ஓமந்தை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முச்சக்கர வண்டிகள் சங்கத்தில் பதிவு செய்யப்படாத நிலையில் பொது மக்களை ஏற்றிச்சென்று பணம் பெறும் சாரதிகளால் பொதுமக்கள் பல்வேறு ஆபத்துக்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

அண்மைக்காலமாக ஓமந்தை பகுதியில் பல முச்சக்கரவண்டிகள் மர்மமான முறையில் நடமாடுகின்றன. முறையான இலக்கத் தகடு அற்ற முச்சக்கரவண்டிகள், புரியாத மொழியில் பேசும் முச்சக்கரவண்டிச் சாரதிகள், முச்சக்கர வண்டி சங்கத்தில் எதுவித பதிவுகளும் செய்யாது அதிக பணம் பெறுதல், பயணிகளை இறக்க வேண்டிய இடத்தில் இறங்காது பிறிதொரு இடத்தில் இறக்கிவிடுதல் மற்றும் ஒழுக்கக்கேடான சில நடவடிக்கைளும் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இது குறித்து சங்கத்தில் பதிவு செய்து சேவைகளில் ஈடுபட்டு வரும் சாரதிகள் கவலை தெரிவித்திருப்பதுடன் முறையான இலக்கத் தகட்டுடன் ஓடும் முச்சக்கரவண்டிகளின், குறிப்பாக சங்கப் பதிவுடன் சந்திகளில் தரித்து நிற்கும் முச்சக்கர வண்டிகளில் பொது மக்களை ஏறுமாறும் சந்தேகமான முச்சக்கரவண்டிகள் குறித்து பொலிஸாருக்குத் தெரிவித்துக் கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-402)

## துணைக் கொத்தணி உருவாகும் ஆபத்து

கொழும்பு,டிசெ.12

மேல் மாகாணத்துக்கு வெளியே உள்ள பகுதிகளில், துணைக் கொரோனாக் கொத்தணிகள் உருவாகும் ஆபத்து உள்ளது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

குறித்த பகுதிகளில் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் மூலங்களைக் கண்டுபிடிப்பதன் மூலம், அது உறுதிப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



வடமாகாண இரட்சணியசேனை நிலையத்தால், வட்டுக்கோட்டை கோட்டைக்காடு பிரிவில், 48 குடும்பங்களைச் சேர்ந்த 265 அங்கத்தவர்களுக்கு மதிய உணவும், குடிதண்ணீர் போத்தல்களும் வழங்கப்பட்டன. (க-159)



முசலி பிரதேச செயலாளர் பிரிவில், சிலாவத்துறை பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, வை.எம்.எம்.ஏ. அமைப்பின் ஊடாக உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-56)



லதன் வரதராஜா (RE/MAX NORTH REALTY) அனுசரணையுடன், கலாநிதி அகிலன் மற்றும் முத்துக் குமாரசாமி ஆகியோர் இணைந்து, நாவலடி கொடிகாமம் நாவலடியில், "புரேவி" வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட 250 மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கினர். (க)



யாழ்.கந்தர்மடம் வட கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட 75 குடும்பங்களுக்கு, ஏ.கே நாதனின் நிதிப் பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-6)



கனடா ரெறன்டோவில் வாழும் மோகனதாஸ் சுகுனகுமாரியின் பிறந்த நாள் பரிசாக, யாழ்ப்பாணம் நெடுங்குளம் பகுதியில் வசிக்கும் 2 பிள்ளைகளின் தாய் ஒருவருக்கு, பூமணி அறக்கட்டளை அமைப்பின் ஊடாக தையல் இயந்திரமும், நிதியுதவியும் வழங்கப்பட்டது. (க)



போக்கட்டி அ.த.க.பாடசாலை மற்றும் தவசிகுளம் கண்ணகை அம்மன் கோவில் ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள 28 குடும்பங்களுக்கு, ஒட்டங்கேணி சனசமூக நிலையத்தினால் அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டன. (க-159)

## யானைகளின் இறப்பில் இலங்கைக்கு முதலிடம்



கொழும்பு, டிசெ. 12
யானைக்கும் மனிதனுக்கும் இடையில் இடம்பெறும் மோதல் காரணமாக, உலகில் யானைகளின் மரணம் அதிகளவில் இடம்பெறும் நாடாக இலங்கை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச கணக்குகள் பற்றிய தெரிவுக்குழுவில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேநேரம், யானை - மனித மோதல் காரணமாக உலகில் அதிகளவான மனித மரணங்கள் இடம்பெறும் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் பதிவாகியுள்ளது. யானை - மனித மோதல் காரணமாக உலகில் அதிகமான மனிதர்களின் மரணம் இடம்பெறும் முதலாவது நாடாக இந்தியா பதிவாகியுள்ளது எனவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. யானை - மனித மோதல் தொடர்பாக பல வருட கால அனுபவத்தை கொண்டுள்ள நிபுணரான பேராசிரியர் பிருத்விராஜ் பெர்னான்டோ, யானை - மனித மோதல் தொடர்பான தற்போதைய நிலை குறித்த தகவல்களை இந்தக் குழுவில் வெளியிட்டபோது இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். (ப)

### போர்க் குற்றத்துடன் தொடர்பு;

# கோத்தா, மஹிந்த உள்ளிட்டவர்கள் கனடாவுக்குள் பிரவேசிக்கக் கூடாது

*கனேடிய அரசை அந்த நாட்டு அமைப்பொன்று வலியுறுத்து*

**கொழும்பு, டிசெ.12**

**போர்க் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட 18 பேருக்கு கனடாவுக்குள் பிரவேசிப்பதற்கு கனடிய அரசு தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.**

"த அலையன்ஸ் கிரியேட்டிவ் கம்யூனிட்டி ப்ராஜெக்ட்" என்ற அமைப்பு கனடிய வெளிவிவகார அமைச்சர் பிரன்சுவா பிலிப் சம்பேனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சத்தியபிரியா லியானகே, மேஜர் ஜெனரல் மஹிந்தா ஹதுருசிங்க, மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி, மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் மேஜர் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய, கேர்ணல் ஜி.வி. ரவிப்ரியா, பிரிகேடியர் பிரசன்னா சில்வா, பிரிகேடியர் நந்தன உடவத்த, பிரிகேடியர் ஷாகி கலேஜ், அட்மிரல் வசந்த குமார ஜெயதேவா கரன்னகொட, அட்மிரல் திசாரா எஸ்.ஜி.சமரசிங்க, அட்மிரல் டி.பிள்யூ.ஏ.எஸ். திசானநாயக்க, சி.என்.வகீஷ்டா ஆகியோரின் பெயர்களும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஐ.நா மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளரின் அறிக்கை மற்றும் பிரித்தானி யாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோரது இலங்கை அரசு மீதான சர்வதேச சுதந்திர விசாரணைக்கான முன்முயற்சி வலியுறுத்தலைத் தொடர்ந்து கனடிய அரசும் இவர்கள் மேல் முதற்கட்டமாக தடைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ப)

## கொவிட்- 19ஐக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல் நோக்கங்களை மறவுங்கள்

*வசந்த யாப்பா பண்டார எம்.பி வலியுறுத்து*

கொழும்பு, டிசெ.12
கொவிட்19 தாக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் நோக்கங்களை மறந்து அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசியல் இலாபத்தை நோக்காகக் கொண்டு எதிர்த்தரப்பினர் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். நீதித்துறை கடந்த காலத்தைக் காட்டிலும் சுயாதீனமான முறையில் செயற்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கம் செய்த தவறை தற்போதைய அரசாங்கம் தொடராது. மக்களாணைக்கு எதிராகச் செயற்பட்ட காரணத்தினாலேயே நாட்டு மக்கள் ஜனாதிபதி தலைமையில் பலமான அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளார்கள். மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. கொவிட்19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த வேண்டுமாயின் அரசியல்வாதிகள் அனைவரும் கட்சி பேதமின்றி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். கொவிட்19 வைரஸ் விவகாரத்திலும் எதிர் தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். பிற நாடுகளில் இவ்வாறான தன்மை கிடையாது - என்றார். (ப)

## உயரிய பாதுகாப்புக்களுடன் புதிய சிறை அமைக்கப்படும்

### சீனாவுடன் இலங்கை பேச்சு

கொழும்பு, டிசெ. 12
உயர் பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய புதிய சிறைச்சாலையை நிர்மாணித்தல் மற்றும் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையை வேறு இடத்துக்கு மாற்றுவது தொடர்பாக இலங்கை அரசு சீன அரசுடன் பேச்சு நடத்தி வருகின்றது என சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

இவ்வாறு புதிதாக அமைப்பதற்கு எதிர்பார்க்கும் சிறைச்சாலையானது விளக்கமறியல் சிறைகள், புனர்வாழ்வு நிலையங்கள், தொழிற்பயிற்சி மற்றும் விளையாட்டு மையங்கள் என பல்வேறு வசதிகளுடன் கூடியதாக இருக்கும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆனபோதும், புதிய சிறைச்சாலை அமைக்கப்படும் இடம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை இடமாற்றப்படும் இடம் தொடர்பாக இராஜாங்க அமைச்சரால் குறிப்பிடப்படவில்லை.

இதற்கு முன்னரான அரசு வெலிக்கடை சிறைச்சாலையை மேல் மாகாணத்தின் ஹொரண பகுதிக்கு மாற்றுவதற்கு திட்டமிட்டிருந்தது. ஆனாலும், இப்போது சிறைச்சாலையை மாற்றும் இடம் குறித்து தீர்மானிக்கப்படவில்லை.

குறித்த சிறைச்சாலையை நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 250 ஏக்கர் நிலப்பரப்பில் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றே இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மேலும் கூறினார். (ம-22)

## பொறுமைக்கும் எல்லை உண்டு

*அரசை எச்சரித்தது சஜித் அணி*

கொழும்பு, டிசெ.12
தனிமைப்படுத்தும் சட்டத்தைப் பயன்படுத்தி கொழும்பு மக்களின் பட்டினியுடன் அரசாங்கம் விளையாடக் கூடாது. பொறுமைக்கும் எல்லை இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேச நாடுகள் இன்று தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு அந்த மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றன. மேலும் தனிமைப்படுத்தப்படும் மக்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை இல்லை. அரசாங்கத்தின் இந்த நிவாரணம் முறையாகப் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. நாட்டில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில் சில பிரதேசங்கள் மாத்திரமே தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்காமல் இருப்பது அவர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்தமைக்காகவா என கேட்கின்றேன்.? அதனால் நாங்கள் எமது மக்களை தனிமைப்படுத்தமாட்டோம். மக்களுடன் இணைந்து போராடுவோம். மக்களின் பட்டினியுடன் விளையாட வேண்டாம் என அரசாங்கத்தைக் கேட்கின்றோம். ஏனெனில் பொறுமைக்கும் எல்லை இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றார். (ப)

## மீள்குடியேற்ற அமைச்சு நீக்கம் பிரச்சினையை உருவாக்கும்!

*நாடாளுமன்றில் சித்தார்த்தன் எம்.பி. சுட்டிக்காட்டு*



கொழும்பு, டிசெ.12
'வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு போதுமான நிதி ஒதுக்கப்படாமல் இருக்கின்றது. 25 வருடங்களாக இடம்பெற்று வந்தமீள்குடியேற்றஅமைச்சு இம்முறை இல்லாதமை மீள்குடியேற்றப் பிரச்சினைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் சபையில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அபிவிருத்தி என்ற ரீதியில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டமே வடக்கில் இடம்பெறுகின்றது. கடந்த அரசு கம்பரெலிய வேலைத்திட்டத்தை மேற்கொள்ளும்போது பிரதேச சபைகள் ஊடாகவே அதனை முன்னெடுத்தது. வடக்கில் தொழில் இல்லாத பிரச்சினை இருக்கின்றது. இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் முதலீட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எமது மக்கள் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இந்தியாவின் தமிழ் நாட்டில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கு வந்து வாழ விருப்பம் தெரிவித்திருக்கின்றபோதும், அந்த வசதிகள் இங்கு இல்லாமல் இருக்கின்றன. அதேபோன்று வீடமைப்புத் திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் பல இன்னும் பூரணப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவற்றையும் பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ப-22)

# சரியான மதகுகள் இன்மையால் காலபோக நெற்செய்கை அழிவு

## தென்மராட்சி விவசாயிகள் கவலை

சாவகச்சேரி, டிசெ. 12

வெள்ளம் வெளியேறக்கூடிய மதகு வசதிகள் இன்மையால் தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் இவ் வருட காலபோக நெற்செய்கை அழிவைச் சந்தித்துள்ளது என பிரதேச நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.



தென்மராட்சி தெற்குப் பகுதியில் உள்ள குளங்களிலிருந்து வெளியேறும் வெள்ளம், இரண்டு கிலோ மீற்றர் நீளமான கீரை வாய்க்கால் மற்றும் ஏனைய வாய்க்கால்கள் நிறைந்து காணப்படுவதால் வெளியேறமுடியாதுள்ளது.

இந்த நிலையால் குளங்கள் நிறைந்து அயலில் உள்ள வயல்களில் காணப்பட்ட பயிர்கள் அழிவடைந்துள்ளன. கீரை வாய்க்காலில்சேரும் வெள்ளம் தனங்களப்பு - சாவகச்சேரி வீதி மற்றும் நாவற்குழி தனங்களப்பு வீதி ஆகியவற்றில் உள்ள மதகுகள் ஊடாக வெளியேறுகிறது.

இந்த மதகுகள் சிறியதாக உள்ளதால் வெளியேறும் வெள்ளத்தின் அளவு குறைவாக இருக்கிறது எனவே அவற்றைச் சீர்செய்ய உரியவர்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர். (ப-9)



# பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு குடிதண்ணீர்

கொடிகாமம், டிசெ.12

அண்மையில் பெய்த புரேவிப் புயல் மற்றும் மழை காரணமாக குடியிருப்புகள் மற்றும் வீதிகளில் 2 அடிக்கு மேல் வெள்ளம் தேங்கியதால் நிர்க்கதியாகி எழுதுமட்டுவாழ் தெற்கு சிறீகணேசா பாடசாலையில் தங்கி இருக்கும் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக சாவகச்சேரி பிரதேச சபையால் குடிதண்ணீர் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

அங்கு தங்கியுள்ள 14 குடும்பங்களைச் சேர்ந்த 54 அங்கத்தவர்களுக்கு பொது நிறுவனங்களினூடாக உதவிகளைப் பெற்று வழங்குகின்றோம் எனத் தெரிவித்த தவிசாளர் பால்மா மற்றும் உலர் உணவுப் பொருள்களை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்துள்ளார். (ப-159)

# தவிசாளர்களின் வழி நடத்தலில் தேங்கிய வெள்ளம் பாய்ந்தோடியது

தென்மராட்சி பிரதேச உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களின் நேரடி வழிநடத்தலில் அந்தப் பகுதிகளில் தேங்கி நின்று மக்களைச் சிரமங்களுக்கு உள்ளாக்கிய வெள்ளம் வாய்க்கால்கள் ஊடாக ஆறு போல் பாய்கிறது.

புரேவிப் புயலின் தாக்கத்தால் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் சாவகச்சேரி உப்புக்கேணிக் குளம் நிறைந்து அயலில் உள்ள 50க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் மற்றும் காணிகளுக்குள் வெள்ளம் தேங்கி நின்றதால் மக்கள் பாதிப்புக்கு உள்ளானார்கள்.

சாவகச்சேரி நகரசபையின். தவிசாளர் நேரடியாகப்பார்வையிட்டு கடலேரிக்குச் செல்லும் வாய்க்காலுக்கு தடையாகக் காணப்பட்ட கட்டடங்களை கனரக வாகனம் மூலம் உடைக்கச் செய்து வெள்ள நீரை வெளியேற்றியுள்ளார். இதனால் உப்புக்கேணி குளத்தில் நீர்மட்டம் குறைந்து அயலில் உள்ள காணிகளிலும் நீர் மட்டம், குறைந்து வருகின்றது. (ப-9)

சுழிபுரத்தில்

# போதைப்பொருளை ஒழிக்க ஜனாதிபதி முன்வரவேண்டும்

*வலி.மேற்கு தவிசாளர் ஜனாதிபதிக்கு கடிதம்*

கொழும்பு, டிசெ.12

போதைப்பொருள் விற்பனை, கசிப்பு உற்பத்தி கசிப்பு பாவனை என்பவற்றில் வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி ஆகிய கிராமங்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு எல்லை மீறி விட்டன. மக்கள் இயல்பாக நிம்மதியுடன் வாழ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடன் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

சுழிபுரம் மேற்கு சுழிபுரம் மத்தி ஆகிய இரு கிராம அலுவலர்பிரிவுகளில் போதைப்பொருள் பாவனை, கசிப்பு உற்பத்தி விநியோக நடவடிக்கைகள் என்பன நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கினர் என்ற காரணத்தால் அண்மையில் இருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர். இதனைவிட 9 வயதுச் சிறுமி ஒருவரும் ஒரு வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார் இதனை விட இன்று வரைக்கும் 7 படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. எனவே நாட்டைக் கட்டியெழுப்பும் செழிப்பான பார்வை என்ற எண்ணக்கருவிலான 10 அம்சங்கள் அடங்கிய தங்களது கொள்கைப் பிரகடனத்தின் கீழ் இந்தப் போதைப்பொருள் விடயத்துக்கு தீர்வுதாருங்கள் என்றுள்ளது. (ப-50)

ஆரம்ப வகுப்பு மாணவர்கள்

# இலவச கற்றலுக்கு பதிவு செய்யுங்கள்

கொடிகாமம், டிசெ. 12

யாழ். சாந்திகம் உளவளத்துணை நிறுவனத்தால் இலவசமாக கற்றல் நடவடிக்கைகளுக்கான கையேடுகள் வழங்கப்படவுள்ளன.

தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான மாணவர்களின் 'சிந்தனை மற்றும் செயல்திறன்களை வெளிக்கொணர்தலும் வளர்த்தலும்' என்ற கருப்பொருளின் கீழ் பின்வரும் செயற்பாடுகளில் பாடசாலை குழந்தைகளை ஊக்குவிப்பதற்கான கையேடுகளை சாந்திகம் உளவளத்துணை நிலையத்தினர் கையளிக்கவுள்ளனர். அதன்படி நிறம் தீட்டுதல், பொது அறிவு, படைப்பாற்றல், நேர்மறையான சிந்தனைகளை உருவாக்குதல், கொரோனா காலத்தில் சிறுவர்களின் எண்ணங்கள் மற்றும் செயற்பாடுகள், சுயபாதுகாப்பு மற்றும் சுய விழிப்புணர்வு சம்பந்தமாக சிறுவர்களின் செயற்றிட்டம்.

இவற்றுக்கான செயல் அட்டைகளை தாங்கள் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் எவை என்பதை, பதிவு மேற்கொள்ளும்போது தெரிவுசெய்யவும். தங்களுடைய தெரிவின் அடிப்படையில் செயல் அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

ஆர்வமுள்ள மாணவர்கள் பெற்றோரின் ஊடாக கீழே தரப்பட்டுள்ள லிங்கை அழுத்துவதன் மூலம் பதிவை மேற்கொள்ளலாம்.

மிகச்சிறப்பான படைப்பாற்றல், நேர்மறை சிந்தனைகள் மற்றும் வெளிப்பாடுகளைக் காண்பிக்கும் மாணவர்களுக்கு ஊக்கப் பரிசு அனுப்பி வைக்கப்படும்.

பதிவை மேற்கொள்ள டிசெம்பர் 18 ஆம் திகதிக்கு முன்னர் https://forms.gle/DaRFkzJdAcArJjmx7 என்ற முகவரிக்குச் செல்லவும். முதல் ஆயிரம் மாணவர்கள் மட்டுமே இதில் பங்குபற்றலாம். மேலதிக தகவல்களுக்கு, சாந்திகம் உளவளத்துணை நிலையம். வட்ஸ்அப் மற்றும் வைபர் 077 406 22 11 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (த-159,9)

# பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு



கொடிகாமம், டிசெ. 12

கொடிகாமம் குடும்ப பாடசாலைகளின் தரம் 11 மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு கடந்த புதன்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் கல்லூரியின் ஆசிரியர்களான திருமதி புஷ்பராணி நகுலேஸ்வரன், திருமதி மஞ்சுளா கண்ணன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கொடிகாமம் அரசினர் வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் மிருசுவில் றோ.க.த.க பாடசாலை ஆகிய ஐந்து பாடசாலை மாணவர்கள் இதில் பங்குபற்றினர். (ப-159)

# தரம் 6 க்கு மாணவர்கள் இணையவழியில் சேர்ப்பு

கொழும்பு, டிசெ. 12

2020ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் 2021ஆம் ஆண்டில், 6ஆம் தரத்தில் மாணவர்களுக்கு பாடசாலைகளை வழங்கும் திட்டத்தை கல்வி அமைச்சு ஆரம்பித்தது.

நாட்டில் முதன்முறையாக இணைய தொழில்நுட்பத்தின் மூலம் இந்தத் திட்டம் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்டது. கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற பேறுபேற்றில் மாவட்ட வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் மாணவர்களுக்கு பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

டிசெம்பர் 24ஆம் திகதிவரை சிங்கள அல்லது தமிழ்மொழிமூலமாக இணையத்தின் ஊடாக தரவுகளை உள்ளிட அனைத்து அதிபர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 3 லட்சத்து 26 ஆயிரத்து 264 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அவர்களில் 47 ஆயிரத்து 193 மாணவர்கள் மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறுபேற்றைப் பெற்று தேசிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (த-இ)

# அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பிரதமரிடம் கோரிக்கை வைத்த சார்ள்ஸ் எம்.பி.



**கொழும்பு, டிசெ.12**

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

போர் முடிவுற்ற போது சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி விடுதலை செய்திருந்தனர். அந்த நேரம் அவர்களுக்கு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை, ஆனால் அதற்கு முன்னர் கைதுசெய்யப்பட்டவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இன்றும் சிறையில் உள்ளனர். இது தொடர்பில் பிரதமர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல் வடக்கு மக்களுக்கு மூன்று வேலை உணவே போதுமானது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியிருந்தார். இந்த கருத்தை நான் வன்மையாகக் கண்டிகின்றேன்.

ஒரு சிலர் உங்களுக்கு ஆதரவாக வாலாட்டுவார்களே தவிர உண்மையான தமிழர் தமிழன் என்ற அடையாளத்துடன் வாழவே விரும்பு கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யவேண்டும் என்பது அமைச்சர் சரத் வீரசேகரவின் தனிப்பட்ட நிலைப்பாடா அல்லது அரசாங்கத்தின் தீர்மானமா என பிரதமர் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்- என்றார். (ஜ-22)

# நிலநடுக்கத்தை ஆராய்வதற்கு நிபுணர் குழு

கொழும்பு,டிசெ.12

கண்டி மாவட்டத்தில் அடுத்தடுத்து இடம்பெற்ற நிலநடுக்கம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவால், இந்த நிபுணர் குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

11 பேர் கொண்ட இந்தக் குழுவுக்கு புவிச்சரிதவியல் மற்றும் சுட்ட சுரங்கத் திணைக்களத்தின் தலைவர் அநுர வல்பொல தலைமை வகிப்பார்.

7 ஆவது தடவையாக கண்டி - திகன, அம்பாகோட்டை, அளுத்வத்த, ஹாரகம உட்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் பற்றி இந்தக் குழு ஆய்வுகளை நடத்தவுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு, எதிர்வரும் நாள்களில் அவற்றைக் கொண்டு எடுக்கவுள்ள நடவடிக்கை என்பவற்றை இந்த நிபுணர் குழுவே அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# சிறுபிள்ளைகளில் அவதானம் தேவை

## தொற்று நோய் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.12

சிறு பிள்ளைகளை பெற்றோர் மிகவும் அவதானமாகக் கண்காணிக்க வேண்டும் என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பிரதானி மருத்துவர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.

சிறு பிள்ளைகள் உணவு உட்கொள்ளும் முறையில் மாற்றம் மற்றும் அவர்கள் பதிலளிக்கும் முறையில் மாற்றம் உள்ளதா என்று ஆராய வேண்டும்.

இது தொடர்பில் தீவிர அவதானம் செலுத்த வேண்டும்.

மாற்றங்கள் தென்படின் மருத்துவமனைகளில் கொரோனா தொற்றும் என்ற அச்சத்தில் சிகிச்சை பெறச் செல்வதைத் தவிர்க்க வேண்டாம். அவர்களுக்கு நோய் அதிகரிப்பதற்கு இடமளிக்க வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



புரேவி புயல் மற்றும் மழை காரணமாக கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஏற்பட்ட வெள்ளம் இன்னும் வழிந்தோடாது காணப்படுகின்றது. இதனால் டெங்கு நோய் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது என மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-159)

# கிணற்றில் விழுந்த சிறுமி உயிரிழப்பு

பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைத்தோட்டம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து சிறுமியொருவர் (வயது-7) உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் அருகில் காணப்பட்ட பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்தே சிறுமி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-இ)

# புதிய அரசமைப்பு உருவாகவேண்டும்

## தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாஹ் வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 12

தேர்தல் முறையை மாற்ற முன்னர் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதனையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் என தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அதற்கு முன்னர் புதிய அரசமைப்பு மேற்கொள்ளப்பட்டு அதனூடாக அதனைச் செய்யவேண்டும். புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. அதனை அரசு தற்போது ஆரம்பித்திருக்கின்றது.

கடந்த அரசாங்கத்தால் அவசரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட 19ஆம் திருத்தமே பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமாகும். நாட்டில் இடம்பெறக்கூடிய சம்பவங்களுக்கு யார் பொறுப்புக் கூறுவதென்று தெரியாது. ஏப்ரல் தாக்குதலுக்கு யார் பொறுப்பு கூறுவதென்று தெரியாமல் ஒருரை ஒருவர் குற்றம் சாட்டும் நிலையே இருந்து வருகின்றது.

அதனால்தான் 20ஆவது திருத்தத்தை கொண்டுவந்து, அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூறும் வகையில் அதிகாரங்களை ஜனாதிபதி தனக்கு கீழ் கொண்டுவந்திருக்கின்றார். இன்று பொறுப்புக்கூற தலைவர் ஒருவர் இருக்கின்றார் - என்றார். (ம-22)

# 20 நாள்களேயான குழந்தைக்கு எப்படி கொரோனா தொற்றியது?

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேள்வி

கொழும்பு, டிசெ.12

பிறந்து 20 நாள்களேயான குழந்தையின் உயிரிழப்பிலிருந்து இலங்கை பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பெற்றோர் தொற்றுக்கு உள்ளாகியிருக்காத நிலையில் குழந்தைக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பதை கொரோனா உயிரிழப்புகள் தொடர்பான மீளாய்வுக் குழு ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அலுத்கே வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது ஒரு குழந்தை மாத்திரமே உயிரிழந்துள்ள போதிலும் இதிலிருந்து நாம் அனைவரும் பாடமொன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். குழந்தை மிகவும் தாமதமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமையே இறப்புக்கான காரணம் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பத்தில் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் முதியவர்களும் கொவிட் தொற்றால் உயிரிழந்தனர். ஆனால் தற்போது இளைஞர்களும் உயிரிழக்கின்றனர். எனவே இலங்கையில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை சுகாதார அமைச்சு நாட்டுக்கு தெரியப்படுத்தும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஐ-இ)

## வீட்டு வளாகத்தில்

# கஞ்சா செடி; ஒருவர் கைது!

திருமலை, டிசெ.12

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீட்டு வளாகத்தில் கஞ்சா செடி வளர்த்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் முள்ளிப் பொத்தானை எட்டாம் கொலணியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

தம்பலகாமம் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அவரது வீட்டைச் சோதனையிட்ட போது, வீட்டு வளாகத்தில் நான்கு அடி உயரமான கஞ்சாச் செடி வளர்க்கப்பட்டிருந்த நிலையில் வீட்டு உரிமையாளரான குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)



# இன்றைய நாள்

**மேடம்:** பலகாலம் மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை நீங்கும். வாக்குறுதி யைக் காப்பாற்றி நிம்மதி அடைவீர்கள். பயம் தீரும். இளைஞர்களின் புகழ் அதிகரிக்கும்.

**இடபம்:** வாழ்வில் முன்னேறுவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள். உங்களின் பலகாலப் பொறுமைக்கு இன்று பெருமை கிடைக்கும் ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.

**மிதுனம்:** சேமிப்பு உயரும். புதிய திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும். உயர்கல்வி அல்லது பணிநிலை குறித்து யோசிப்பீர்கள். முன்பு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்:** மற்றவர் தலையீட்டால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும் நாள். தோல்வியுற்ற விடயத்தில் புதுக்கோணத்தில் வெல்வீர்கள். சுபநிகழ்ச்சி காரணமாக நெருங்கிய விருந்தினர் வருகை உண்டு.

**சிம்மம்:** செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். கனவு நனவாகும். தவறுகளைத் திருத்திக் கொள்வது பற்றிய சிந்தனை மேலோங்கும். கடன் சுமை குறையும்.

**கன்னி:** வெளியூரிலிருந்து நல்ல தகவல் வரலாம். சிக்கல் நீங்கும். நெருங்கிய நண்பர்களிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். வளர்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்:** வருங்கால நலன் பற்றிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட வாதத்தைத் தீர்த்து வைப்பீர்கள். கவனத்துடன் இருக்க வேண்டும்.

**விருச்சிகம்:** பணத்தேவை நிறைவேறும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். கணவர் பாராட்டுவார். குழந்தைகள் பற்றிய பிரச்னைகள் தீரும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** மனச்சுமை குறையும் நாள். உறவை ஒட்டுவதில் ஆர்வம் கூடும். நவீன பொருட்கள் வாங்குவதில் அதிகச் செலவு செய்யாதீர்கள். புதியவரின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்:** ஜாமீன் போட்ட தொகை திருப்பப்படுவதால் நிம்மதி ஏற்படும். பிள்ளைகளால் மனம் மகிழும் . மனச்சுமை உங்ககளால் குறையும் பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

**கும்பம்:** சொத்து சம்பந்தமான வழக்கு விஷயங்கள் தள்ளிப்போகும். புதிய விஷயங்களில் ஆர்வம் செலுத்தி கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:** பங்குச் சந்தையில் அதிக முதலீடுகள் செய்ய வேண்டாம், வாழ்க்கைத் துணையின் சகோதரர் மூலம் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினரிடமிருந்து நல்ல செய்தி ஒன்று வரும்.

# மஹர சிறைக் கலவரத்துக்கு பாதாளக் குழுவே காரணம்

## விசாரணை அறிக்கையில் நீதியமைச்சர் விளக்கம்

கொழும்பு, டிசெ.12

மஹர சிறைச்சாலையில் கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தை, பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் சிலரே வன்முறையாக மாற்றியுள்ளனர் என மஹர சிறைச்சாலை விவகாரம் தொடர்பான விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட் டது. இக் குழுவின் அறிக்கையை நீதியமைச்சர் நாடாளுமன்றில் தாக்கல் செய்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"சில கும்பல் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பழிவாங்க முயன்றதால், கைதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்முறைக்கு திரும்பியுள்ளது. கைதிகள் யாரும் துப்பாக்கிகள் ஏதும் வைத்திருக்கவில்லை. அதிகாரிகள் மற்றும் நிலைமையைத் தணிக்க வந்தவர்கள் மாத்திரமே துப்பாக்கிகளை வைத்திருந்தனர்.

இருப்பினும், வாயிலுக்கு அருகில் மரக் கட்டைகள், இரும்பு கம்பிகள் மற்றும் கற்கள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இதேவேளை சில கைதிகள், பல வகையான மாத்திரை களைத் திருடி அவற்றை உட்கொண்டுள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. சிறைவளாகத்தில் இருந்த முக்கிய ஆவணங்களை கைதிகள் எரித்துள்ளனர். அத்துடன் விளக்கமறியலில் கைதிகள் வைக்கப்பட்டுள்ள பகுதி தவிர, வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களும் எரிக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை தனிமைப்படுத்தவும், ஏனையவர்களை சுய தனிமைப்படுத்தலில் வீடுகளுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது. (ந-இ)

# தவிசாளராகின்றார் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, டிசெ.12

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் புதிய தவிசாளராக மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக 37 ஆண்டுகள் இருந்த மஹிந்த தேசப்பிரியவின் பதவிக்காலம் கடந்த நவம்பர் 13 ஆம் திகதி முடிவுக்கு வந்த நிலையில் தற்போது எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு, கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதியன்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 41 பி மற்றும் 951 பிரிவுகளின் கீழ் அமைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பி டத்தக்கது. (வ-இ)

# இரு குழந்தைகள் படுகொலை; இலங்கையருக்கு தடுப்புக்காவல்

## லண்டனில் சம்பவம்

கொழும்பு, டிசெ.12

இரண்டு குழந்தைகளைப் படுகொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட லண்டனில் உள்ள இலங்கையர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு லண்டனில் வசிக்கும் 41 வயதான நித்திய குமார் என்பவர், அவரது மனைவி குளித்துக் கொண்டிருக்கும்போது தனது இரண்டு குழந்தைகளையும் கத்தியால் குத்தியுள்ளார். குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டதை அடுத்து நீதி மன்ற உத்தரவில் அவர் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குழந்தைகளைக் கொலை செய்யும் போது, நித்திய குமார் மருட்சி கோளாறால் பாதிக்கப்பட்டிருந்ததாக மனநல மருத்துவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்தே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ப)

# சுற்றுலாவிகள் நுவரெலியா வருவதைத் தவிருங்கள்

## அந்த மாவட்டச் செயலர் அறிவிப்பு

நுவரெலியா, டிசெ.12

நுவரெலியாவிற்கு சுற்றுலா செல்வதைத் தவிர்த்து கொள்ளுமாறு நுவரெலியா மாவட்டச் செயலாளர் ரோஹன புஷ்பகுமார கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர்;

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது 250க்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே நாம் ஒரு சில கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்பிரகாரம் டிசெம்பர் மாதம் இறுதிப்பகுதிவரை நுவரெலியாவிற்குள் ஏனைய பிரதேசங்களில் இருந்து சுற்றுலாப்பயணிகள் வருகை தருவதை கட்டுப்படுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். குறிப்பாக பண்டிகைக் காலத்தின் போது அதனைத் தவிர்த்துச் செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

நுவரெலியாவிலுள்ள மக்கள் மற்றும் அங்கு சுற்றுலா மேற்கொள்ளத் தீர்மானித்துள்ள ஏனைய பகுதிகளில் உள்ளவர்களின் பாதுகாப்புக் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ப)

# எயிட்ஸ் தொற்றாளர்கள் வடக்கில் திடீர் அதிகரிப்பு

## புதிதாக 125 பேர் அடையாளம்

**மன்னார், டிசெ.12**
**வடக்கு மாகாணத்தில் தற்போது வரை 125 புதிய எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**



மன்னார் மாவட்டத்தில் மட்டும் 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட தொற்று நோய் பிரிவு பதில் மருத்துவ நிபுணர் சலினி நாணயகார தெரிவித்தார்.
சர்வதேச எயிட்ஸ் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விசேட விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
15 வயது தொடக்கம் 24 வயதுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகள் அதிகமாக எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை தரவுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இலங்கை முழுவதும் 2019 ஆம் ஆண்டு வரை 439 புதிய எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.
இலங்கை முழுவதிலும் 34 பாலியல் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. எச்.ஐ.வி தொற்றுக்கான தாக்கம் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த நிலையங்களுக்குச் சென்று பரிசோதனை செய்துகொள்ள முடியும் -என்றார். (ஐ-56)





# பாரதியார் நினைவுதினம் நல்லூரில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12
யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினம் நல்லூர் ஆலய பின் வீதியில் உள்ள அவரது உருவச் சிலைக்கு முன்பாக நேற்று காலை நினைவு கூரப்பட்டது.
இந்திய துணைத் தூதுவர் கே.பாலசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாரதியாரின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.
நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், யாழ் மாநகர ஆணையாளர், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-7)

# தீவன உற்பத்தி பண்ணை திறப்பு



வவுனியா,டிசெ.12
கோழிக்கான தீவனம் உள்ளிட்ட அனைத்து கால்நடைகளுக்குமான தீவனங்களை உற்பத்தி செய்யும் ஆலையுடன் கூடிய ஒன்றிணைந்த பண்ணை வவுனியாவில் திறக்கப்பட்டுள்ளது.
'ARS Farms' எனும் பெயரில் வவுனியா , வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்தில், சங்கராபுரம் எனும் கிராமத்தில் பண்ணை திறக்கப்பட்டுள்ளது.
வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் சிவகரன், சங்கராபுரம் கிராம உத்தியோகத்தர் பாலசிறிதரன், உள்ளிட்டோர் பண்ணைச் செயற்பாடுகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்தனர்.வடக்கில் குறிப்பாக வன்னியில் உற்பத்தியாகும் மூலப் பொருள்களைக் கொண்டு கால்நடைகளுக்கான தீவனம் உற்பத்தி செய்யப்படவுள்ளது. பண்ணையில் வளர்க்கப்படும் கோழிக்குஞ்சுகளின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதோடு, எதிர்காலத்தில் குறைந்த விலையில் உள்ளூர் பண்ணையார்களுக்கும் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (க-110)






# முல்லைக் கரையில் இந்தியக் கழிவுகள்!

முல்லைத்தீவு, டிசெ. 12
முல்லைத்தீவு கடற்கரையில் அதிகளவான கழிவுப்பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளன.
அண்மைய நாள்களாக முல்லைத்தீவு கடற்கரையில் அதிகளவான கழிவுப் பொருள்கள் கரையொதுங்கியுள்ளன. இவ்வாறு கரையொதுங்கியுள்ள கழிவுப் பொருள்கள் இந்தியாவின் தமிழ்நாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.
உணவுப் பொருள்களின் கழிவுகளே அதிகமாக வீசப்பட்டுள்ளன. இவை திட்டமிட்டு கடலில் கொட்டப்பட்டிருக்கலாம் என்ற அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது. (ம-246)

### மெனிங் சந்தை வர்த்தகர்கள்

# இரண்டாவது நாளாகவும் சாகும் வரை போராட்டம்

கொழும்பு, டிசெ.12
பேலியகொட மெனிங் சந்தை வர்த்தகர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
பேலியகொட மெனிங் சந்தையின் வியாபாரிகளுக்கு சொந்தமான கடைத் தொகுதிகளை உரிய முறையில் வழங்குமாறு கோரியே, இந்தப் போராட்டம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.
போராட்டம் தொடர்பாக மெனிங் சந்தை வணிக சமூகத்தின் பொருளாளர் நிமல் அத்தநாயக்க கருத்து தெரிவிக்கையில்;
'நாங்கள் தெருக்களில் இருப்பவர்கள் அல்லர்.
மேலும் எங்களது மெனிங் சந்தையை கோட்டையில் விரைவில் திறக்குமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றோம்.
நாங்கள் மகிழ்ச்சியுடன் மூன்றரை ஏக்கரில் வர்த்தகம் செய்தோம். ஆனால் நீங்கள் 13 ஏக்கர் பெட்டிக் கடையைக் கட்டி, எங்களுக்கு ஒரு சிறிய பெட்டிக் கடை யைத் தருவீர்களா?' என்று கேள்வி எழுப்பியுள்ளனர். (ஐ-இ)


# பல்கலைப் பதிவுக்கு மேலும் காலவகாசம்

கொழும்பு,டிசெ.12
2021 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு, மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான பதிவுகளுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். இந்த வருடத்துக்கான கல்விப் பொதுத் தாராதர உயர்தர பரீட்சை தொடர்பில் சில வழக்குகள் நீதிமன்ற நிலுவையில் காணப்படுகின்றமையும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.
2021 ஆம் ஆண்டுக்காக 41 ஆயிரத்து 500 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

கொவிட்19 அச்சம் நிலவுகின்ற போதும், நத்தார் பண்டிகையை வரவேற்கும் முகமாக கொழும்பு புறக்கோட்டையில் நத்தார் மர. அலங்காரத் தோரணங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. (க)







# புதிய கொத்தணி உருவாக வாய்ப்பு

## எச்சரித்தார் சுதர்ஷினி பெர்னாண்டோ

கொழும்பு, டிசெ.12

களனி, திஹாரி மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் வைரஸ் பரவலின் புதிய கொத்தணிகள் உருவாக வாய்ப்புள்ளது, அதனை வெற்றி கொள்வதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோயியல் மற்றும் கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: களனி, திஹாரி மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் வைரஸ் பரவலின் புதிய கொத்தணிகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு, விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கம்பஹா மாவட்டத்தில் வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வாழ்வாதாரத்தை இழந்த 5லட்சத்து 39ஆயிரத்து 543 பேருக்காக 2 ஆயிரத்து 697 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள 11 ஆயிரத்து 28 குடும்பங்களுக்காக 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை, 30 ஆயிரம் 546 குடும்பங்களுக்காக 92 மில்லியன் ரூபா பணத்தை அரசாங்கம் செலவிட்டுள்ளது. இதுவரையில் வைரஸ் பரவல் காரணமாக 25 ஆயிரம் வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றார். (ஐ-இ)

# அழுத்தம் கொடுக்கவில்லை

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எந்த ஒரு நீதியரசரும்பு திதாக நியமிக்கப்படவில்லை. சேவைமூப்பு அடிப்படையிலே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். நீதி அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் அது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

20 ஆவது திருத்தம் நிறைவேற்றிய பின்னர் புதிதாக 6 உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர். மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு 14 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரதம நீதியரசருக்கு தேவையானவாறு நீதியரசர்கள் நியமிக்கப்படுவ தில்லை.

அவர் பரிந்துரை செய்தாலும் ஜனாதிபதி தான் நியமனம் வழங்குகிறார்.

நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எந்த ஒரு நீதியரசரும் நியமிக்கப்படவில்லை- என்றார். (ப)



# மாகாண சபை தேர்தலை விரைவுபடுத்தத் திட்டம்

## ஆணைக்குழு உறுப்பினர்களுடன் பிரதமர் ஆராய்வு

கொழும்பு,டிசெ.12

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான சட்ட நடவடிக்கைகளை ஆராயுமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், பிரதமருக்கும் இடையேயான சந்திப்பு, பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம் பெற்றது.

பழைய அல்லது புதிய முறைக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் குறித்து ஆராயுமாறு பிரதமர் அறிவுறுத்தினார்.

இம்முறை மாகாண சபைத் தேர்தலை பழைய முறைக்கு அமைவாக நடாத்தி, எதிர்காலத்தில் தேவையான சட்டங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர், புதிய முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது எளிதாக அமையும் என்று உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் ஏற்கனவே அது தொடர்பில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்ட்டுள்ளது என்று தெரிவித்தார்.

சந்திப்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் ஜீ.புஞ்சிஹேவா உள்ளிட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர் என்று ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-இ)

### மிரட்டும் எலிக் காய்ச்சல்

# அநுராதபுரத்தில் 200 பேர் பாதிப்பு

அநுராதபுரம், டிசெ. 12

அநுராதபுரம் மாவட்டத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் இது வரைக்கும் 200 பேருக்கு எலிக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதுடன் அதனால் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அநுராதபுரம் மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் தேஜன சோமதிலக தெரிவித்தார்.

திறப்பனை, விலச்சிய மற்றும் இபலோகம பகுதிகளைச் சேர்ந்த மூவரே இதனால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு 150 பேருக்கு மாத்திரமே எலிக் காய்ச்சல் ஏற்பட்டிருந்ததுடன் இவ்வருடம் இது வரைக்குமான காலப் பகுதிக்குள் 200 பேர் எலிக் காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் விசேட மருத்துவ நிபுணர் தெரிவித்தார்.

"கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு எலிக் காய்ச்சலுக்குள்ளான நோயாளர்கள் அதிகரித்து காணப்படுகின்றனர். தற்போது விவசாயிகள் வயல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் இம் மாதத்தினுள் எலிக் காய்ச்சல் அதிகரிக்கக் கூடும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# மாணவிக்கு கொரோனா

நுவரெலியா, டிசெ.12

நுவரெலியா நாவலப்பிட்டியிலுள்ள பாடசாலையொன்றில் 12 ஆம் தரம் கல்வி பயிலும் மாணவியொரு வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த மாணவிக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகளிலேயே அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த மாணவி தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டு ள்ளனர். மாணவியுடன் தொடர்பில் இருந்த நான்கு ஆசிரியர்கள் மற்றும் 16 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ப)

மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில்
**கணித பாட ஆசிரியையாகவும் பிரதி அதிபராகவும்** அரும்பணியாற்றி இன்று **(12.12.2020)**
சனிக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும்

**திருமதி க.ஞானச்சந்திரன்**
(Maths - SP - Train - B.A, PGDE)

அவர்களது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

23.03.1990 - 11.09.2011 - யா/ சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்
12.09.2011 - 12.12.2020 - யா/சந்திரபுரம் ஸ்கந்தவரோய மகாவித்தியாலயம்

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரி சங்கம்
**யா/ சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் மட்டுவில் சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

### திருமதி புனிதவதி இரத்தினப்பிரகாசம்



**பிறப்பு** 10.06.1932 **இறப்பு** 11.12.2020

இணுவில் தெற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி இரத்தினப் பிரகாசம் நேற்று (11.12.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினபிரகாசத்தின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான சற்குருநாதன், செகராசபிள்ளை, அகிலாண்டேஸ்வரி மற்றும் முருகம்மையார் (வெள்ளை-நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினமலர் (பிள்ளை), கலாவதி, பாமினி ஆகியோரின் அன்புத் தாயும், கலைநேசன், யோகேஸ்வரன், சிவலிங்கம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.


# சனிப்பெயர்ச்சி பலன்கள்!



ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.




மனசாட்சிக்கு மதிப்பளித்து வாழ்பவர் நீங்கள். சனி 27.12.2020 முதல் 19.12.2023 வரை, உங்கள் ராசியை விட்டு விலகி பாதச் சனியாக அமர்ந்து பலன் தரப் போகிறார்.

பணப் பை நிரம்பும். அலைபாய்ந்த மனசு இனி அமைதியாகும். எதிர்மறை எண்ணங்கள் மறையும். பயம் விலகும். உடல் நிலை சீராகும். இருந்தாலும் எளிய உடற்பயிற்சிகள், உணவுக் கட்டுப்பாடுகளும் உங்களுக்குத் தேவை. பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரமை நீங்கும். சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை உணர்வீர்கள். வாழ்க்கைத் துணைவர் கவலைகள் நீங்கி உற்சாகம் அடைவார். என்றாலும் கணவன் மனைவிக்குள் ஈகோ பிரச்சினைகளும், மனஸ்தாபங்களும் வந்து நீங்கும்; விட்டுக்கொடுத்து போவது நல்லது. வெளிப்படையாகப் பேசுவதாக நினைத்து யாரையும் எடுத்தெறிந்து பேசாதீர்கள். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. வழக்குகளில் அலட்சியம் வேண்டாம். 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனி பகவான் அதிசாரத்தில் 3ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால், இக் காலகட்டத்தில் உங்களின் புகழ், கௌரவம் உயரும். பணவரத்தும் யோக பலன்களும் அதிகரிக்கும்.

**சனி பகவானின் பார்வை...**

சனி பகவான் உங்களின் 4ம் வீட்டைப் பார்ப்பதால் வேலைச்சுமை, காரியங்களில் போராட்டம் இருக்கும். திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். சனி பகவான் உங்களின் 8ம் வீட்டைப் பார்ப்பதால் உடல் நலத்தில் கவனம் தேவை. பழைய கடன் மனத்தை வாட்டும். உங்களின் லாப வீட்டைப் பார்ப்பதால் திடீர் பணவரவு உண்டு. ஷேர் மூலம் பணம் வரும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் பாக்கியாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனி பகவான் செல்வதால் இக் காலகட்டத்தில் எதையும் துணிச்சலுடன் செய்து முடிக்கும் வல்லமை கிட்டும். சொந்தங்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். புது வீடு, மனை, வாகனம் வாங்குவீர்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. பெரிய பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். இதற்கிடையில் 11.05.2021 முதல் 26.09.2021 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் பழைய வழக்குகள், பொருள் இழப்புகள் வரக்கூடும்.

உங்களின் அட்டமாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனி பகவான் செல்வதால் பணத்தட்டுபாடு, காரியத்தடை, திடீர்ப் பயணங்கள் வந்து நீங்கும். 25.05.2022 முதல் 09.10.2022 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் திடீர் யோகம், எதிர்பாராத உதவி, பண வரவு எல்லாம் உண்டு. அயல்நாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் கிட்டும். உங்களின் பூர்வபுண்ணியவிரயாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனி பகவான் செல்வதால் வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். புதிய சொத்துச் சேர்க்கையுண்டு. இதற்கிடையில் 27.06.2023 முதல் 23.10.2023 வரை உள்ள காலத்தில் சனி பகவான் வக்ரமடைவதால், பிள்ளைகளால் அலைச்சலும் டென்ஷனும் வரக்கூடும். உறவினர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

இல்லத்தரசிகளே! கணவரின் வருமானம் உயரும். அவரின் அன்பு அதிகரிக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு வேலைச் சுமை குறையும். சம்பளம் உயரும்.

வியாபாரிகள், போட்டியாளர்களைத் திணறச் செய்வார்கள். புது அணுகுமுறையை வெளிப்படுத்துவார்கள். புதிய முதலீடுகள் செய்வார்கள். விளம்பரங்களின் மூலம் உங்கள் தொழிலை விரிவு படுத்துவீர்கள். கொடுக்கல் வாங்கலில் நிம்மதி ஏற்படும். பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். கடையை நவீனமயமாக்குவீர்கள். தள்ளிப்போன பெரிய நிறுவனங்களின் ஒப்பந்தங் கள் கையெழுத்தாகும். உணவு விடுதி, இரும்பு, ஸ்பெகுலேஷன் வகைகளால் ஆதாயம் உண்டு. பங்குதாரர்கள் பணிந்து வருவார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு அதிக சம்பளத்துடன் புது வேலை கிடைக்கும். உங்களை ஆதரிக்கும் புதிய அதிகாரி வந்து சேர்வார். நீதிமன்றத் தீர்ப்பு சாதகமாகும். இழந்த சலுகைகள், பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். கணினித் துறையினருக்கு, வெளி மாநிலம் வெளிநாடுகளில் ஒப்பந்த முறையில் பணி புரிய வாய்ப்புகள் வரும்.

**பரிகாரம்:**

அருளும் பொங்கு சனீஸ்வரரை ஒருமுறை வழிபட்டு வாருங்கள்; மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுங்கள்; துன்பங்கள் நீங்கி வெற்றி கிடைக்கும்.

# விளையாட்டு துறையூடாக பொருளாதார அபிவிருத்தி

## பசில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

விளையாட்டுத் துறையை மேம்படுத்தி அதனூடாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள அரசு எதிர்பார்த்துள்ளது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



வரவு செலவுத் திட்ட வரலாற்றில் இளைஞர் விவகார மற்றும்விளையாட்டுத்துறைக்கென 8 ஆயிரத்து 264 மில்லியன் ரூபா அதிக தொகை ஒதுக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில் லங்கா பிரிமீயர் லீக் போட்டியை நடத்துகின்றமை பொருளாதாரத்துக்கு பெரும் பலமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# தொடர் மழையால் 2467 ஏக்கர் நாசம்

மட்டக்களப்பு, டிசெ.12

தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 2,467 ஏக்கர் பெரும் போக நெற்செய்கை நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளது என மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் எம்.ஜெகநாதன் தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக விவசாய திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளில் 846பேர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுணதீவு, வாகரை, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி கிரான், செங்கலடி, ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிகமான நெல் வயல்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

மாவட்டத்திலுள்ள 18 பெரும்போக உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வயல் நிலங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால் பயிர்கள் அழுகிவருகின்றன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (வ-இ)

# உரிமைகளுக்காக கைகோருங்கள்

## நாட்டு மக்களிடம் இலங்கை திருச்சபை வேண்டுகோள்


கொழும்பு, டிசெ.12

வேறுபாடுகளைக் களைந்து மனித உரிமைகளுக்காக கைகோர்க்குமாறு இலங்கையர்கள் அனைவரிடமும் இலங்கை திருச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது. கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ள குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் உடல் நலம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருச்சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## திரு.கோணையா தியாகராஜா



"இருந்தாலும் இறந்தாலும் பெயர்சொல்ல வேண்டும்
இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்"
என்ற கவிதை வரிகளை மெய்யாக்கி வாழ்ந்துகாட்டி, எம் குடும்ப விருட்சத்திற்கு நீராகி, வேராகி, எங்கள் குடும்பத்தின் குலவிளக்காகவும், எமது வாழ்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் தன்னையே உருக்கி ஒளி கொடுத்த மெழுகுவர்த்தியாகவும், அளவற்ற அன்பைப் பொழிந்த கருணைக்கடலாகவும் விளங்கி, பொது வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்து, எமது நெஞ்சத்து நினைவுகளைச் சுமந்தவண்ணமே இறைவன் திருவடிகளை அடைந்துவிட்ட எங்கள் உயிரினும் மேலான அன்புத் தெய்வத்திற்கு, இதய அஞ்சலியாக இந்நினைவு மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.





எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொண்ட மகற்கு"
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்து டன் கலந்துவிட்ட எமது அன்புத் தெய்வமாகிய திரு.கோணையா தியாகராஜா அவர்கள் இறையடி எய்திய செய்தி அறிந்து உளம் வருந்தி தொலை பேசியூடாக அனுதாப வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டோருக்கும், நேரில் கலந்து கொண்டோருக்கும், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் இணைந்து உதவியவர்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகள், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டவர்களுக்கும், இறையடி எய்திய நாளிலிருந்து இன்றுவரை சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| பிறப்பு | இறப்பு | | |
|---|---|---|---|
| 29.07.1930 | 12.11.2020 | இல. 27, புதுவீதி,<br>கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். | குடும்பத்தினர். |

# மரண அறிவித்தல்

## திருமதி சாந்தநாயகி அருந்தவநாதன்

(இளைப்பாறிய ஆசிரியர் - கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்,
யாழ். சன்மார்க்க வித்தியாலயம்)



யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மற்றும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி அருந்தவநாதன் (இளைப்பாறிய ஆசிரியர் - கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம், யாழ். சன்மார்க்க வித்தியாலயம்) அவர்கள் 7-12-2020 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அருந்தவநாதனின் (இளைப்பாறிய ஊழியர் இலங்கை போக்குவரத்து சபை) அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஸ்கந்தரூபன், சாந்தினி, சிவகணேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுசீந்திரன், ஜெயப்பிரியா, செந்திரு ஆகியோரின் அன்பு மாமியாரும், சௌமியா, அவினாஷ், விவான், ஆத்மிகன், திவ்வியா, ஜெனனி ஆகியோரின் ஆசைமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சர்வலோகநாயகம், சபாநாயகம், சௌபாக்கியநாயகி, நல்லை நாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசரத்தினம், சத்தியாநந்தன், பேர்ல் (Pearl), ராஜநாயகி, அற்புதராணி, சரோஜினிதேவி, உமா, திரவியரத்தினம், காலஞ்சென்றவர்களான மகேசரத்தினம், தெய்வேந்திரன், அற்புதநாதன், சுந்தரலிங்கம், முருகானந்தன், இந்திரா, மோகனா, புஸ்பவதி, ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13-12-2020) ஞாயிற்றுக்கிழமை COVID-19 விதிமுறைகளுக்கு அமைவாக குடும்பத்தினருடன் மட்டும் நடைபெற உள்ளது என்பதை மிக மன வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| பிறப்பு | இறப்பு | |
|---|---|---|
| 26.08.1938 | 07.12.2020 | தகவல்:<br>குடும்பத்தினர். |

## பணியாளர் தேவை

* கணினி இயக்குனர்கள்
* புத்தகம் கட்டுனர்கள்

(அச்சகத்தில் வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை).
பழகவிரும்புபவர்களும் நேரில் வரவும்.
திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
இன்றும், நாளையும் 9.00 - 4.00 மணிவரை சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.

**ஷாம்பவி பதிப்பகம்**
**265, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**076 0333 502**

## 2021 க்கான நாட்காட்டிகள் (கலண்டர்)

வியாபார நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், அச்சகத்தினருக்கு தேவையான சாந்தி மாதாந்த தமிழ் பஞ்சாங்க கலண்டர்கள். A2, A3 அளவுகளிலும் ஆங்கிலக் கலண்டர் 20" 30", Office கலண்டர் மற்றும் வர்ணமான படக் கலண்டர்கள். சகல விதமான அளவுகளில் எம்மிடம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**சிவதயா அச்சகம்**
**92 (150), நாவலர் றோட், (N.S.B வங்கி அருகில்), மனோகரா சந்தி (யாழ்ப்பாணம்)**
**077 641 3568, 077 396 5214**
**021 221 9483**


## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 . 01 . 1937

மறைவு 26 . 11 . 2016

### அமரர் கிட்டிணன் பொன்னையா

**(திதி – திரயோதசி)**

அன்பின் ஆலயமாய்
அரவணைப்பில் அன்னையாய்
குடும்பத்தின் தலைமகனாய்
குவலயத்தின் நன்மகனாய்
தமக்கென வாழாது
எமக்கென வாழ்ந்து – என்றும்
நல்வழி காட்டினீர்
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
நாம் மறவோம் எம் தெய்வத்தை

**கூவில்,**
**புலோலி தென்மேற்கு,**
**புலோலி.**

**குடும்பத்தினர்**

## மணிவிழா வாழ்த்து




இலங்கை ஆசிரிய சேவையில்
**35 வருடங்களாகச்**
சேவையாற்றி இன்று
**(12.12.2020) சனிக்கிழமை**
எமது பாடசாலையிலிருந்து
ஓய்வுபெறும்

**திரு.கனகரத்தினம் குணசீலன் (ஆசிரியர்)**
**(SLPS - I)**

அவர்கள் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
**யா/ மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்**

Best Wishes

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களைபதிவுசெய்தல்- 2021
## வலிகாமம் வடக்குபிரதேசசபை, காங்கேசன்துறை

2021ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவுசெய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள் / தளபாடங்கள் /உருக்குவீட்டு உபகரணப் பொருட்கள் / பிளாஸ்ரிக்பொருட்கள்.
02. காகிதாதிகள் மற்றும் எழுதுபொருட்கள்.
03. மின்சாரஉபகரணங்கள் மற்றும் தெருவிளக்குஉபகரணங்கள்.
04. கொங்கிறீட் பொருட்கள்/ ஹியூம் குழாய்கள்/சீமெந்துக் கற்கள்.
05. ரயர் வகைகள்/ரியூப் வகைகள் / பற்றிவகை.
06. வாகனம், இயந்திரங்களின் உதிரிபாகங்கள் மற்றும் துணைப்பொருட்கள்.
07. கணணிகள் மற்றும் கணணிதுணைப்பொருட்கள்.
08. புகைப்படப்பிரதி இயந்திரம்/தொலைநகல் இயந்திரம்/ரோணியோ இயந்திரம் / டுப்ளோ இயந்திரம்.
09. நூலக நூல்கள்.
10. சீமெந்து/கண்ணாடி உற்பத்திகள்/ அலுமினிய வேலைகள்/ இரும்பு உட்பட கட்டடப் பொருட்கள்.
11. அறிவித்தல் பலகைகள் /பதாதைகள் /பெனர் /ஸ்டிக்கர்.
12. துடைப்பம் /விளக்குமாறு/ தும்புத்தடி/ தூரிகைகள்/சிறியகால் துடைப்பங்கள் கழுவும் திரவங்கள்.

**சேவைகள்**

01. அனைத்து வகையான அச்சுவேலைகள்.
02. அலுவலக தளபாடத் திருத்தவேலைகள்.
03. கணணி துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்த வேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்.
04. மோட்டார் வாகனதிருத்த வேலைகள்/சேவிஸ் செய்தல்.
05. பதாதைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் வரைதல்/தயாரித்தல்/அச்சடித்தல்
06. இறப்பர் முத்திரைதயாரித்தல்.
07. டியூப் ஒட்டுதல், ரயர்களுக்கு திரிவைத்தல், ரயர்களை மீள்நிரப்புதல், ரயர்களை மாற்றுதல் போன்ற சேவைகள்.
08. நிர்மாண ஒப்பந்தவேலைகள்

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவோஅல்லதுதொலை பேசி இல. 021-2241130 மூலமாகவோஅறிந்துகொள்ளலாம்.

**பொது நியந்தனைகள்**

01. பதிவுசெய்துகொள்ளும் அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு அம்சத்தின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவுசெய்துகொள்ளும் வழங்குநர்கள் நிர்மாண ஒப்பந்தவேலைகளுக்கு பின்வரும் விபரப்படியும்

01. ரூ50,000.00 வரை ரூ500.00
02. ரூ50,000.00 முதல் ரூ1,500,000.00 வரை ரூ1,500.00
03. ரூ1,500,000.00 முதல் ரூ2,000,000.00 வரை ரூ2,000.00
04. ரூ2,000,000.00 க்குமேல் ரூ2,500.00


ஏனையபொருட்கள் சேவைகளுக்கு தனித்தனியாக ரூ500.00 இனையும் பதிவுகட்டணமாக செலுத்தவேண்டும்.

02. தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் "செயலாளர், வலிகாமம் வடக்குபிரதேசசபை"என்னும் பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் அல்லது காசுக்கட்டளை மூலம் கட்டணம் செலுத் தலாம்.
03. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவுசெய்துகொண்டுள்ள வழங்குநர்களிடம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறுபெறுகை செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் சபையைச் சார்ந்தது.
04. இந்தச் சபையினால் வழங்கல் கட்டளை பிறப்பிக்கட்டப்பட்டு உரியகாலத்தில் பொருட்கள் சேவையை வழங்கத்தவறினால் முன்னறிவித்தலின்றி வழங்கல் கட்டளை இரத்துசெய்து அடுத்த வழங்குநருக்கு கட்டளை அனுப்பப்படும் என்பதைகவனத்தில் கொள்ளவும். குறித்தகாலத்தில் தரமானபொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்கள் ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுபட்டியலில் சேர்க்கப்படும்.
05. எல்லாவிண்ணப்பங்களும் 2020.12.28 ஆந் திகதிபி.ப 2.00 மணிக்குஅல்லதுஅதற்குமுன் செயலாளர் வலிகாமம் வடக்குபிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாகவலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்- 2021 "எனகுறிப்பிடப்படுதல் வேண்டும்.

**திரு.சோ.சுகிர்தன்**
**தவிசாளர்.**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை.**
**12.12.2020**

## மரண அறிவித்தல்

### கந்தசாமி சண்முகம்பிள்ளை (சண்)



காரைநகர், தங்கோடை கள்ளித் தெருவை பிறப்பிடமாகவும், கேணியடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்துவந்தவருமாகிய கந்தசாமி சண்முகம்பிள்ளை (சண்) 05.12.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நல்லம்மாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துரம்பு - விசாலாட்சியின் அன்பு மருமகனும், உமாதேவியின் பாசமிகு கணவரும், தர்ஜினி (சுவிஸ்), தர்மசீலன் (கண்ணன்), தாரனி, தர்மபுத்திரன் (காந்தி - லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் மகேஸ்வரி, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகநாதன், கஜனி, தயாளன், மயூரி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவா்களான முத்துக்குமாரசாமி, பஞ்சலிங்கம், ஆனந்தநாதன் ஆகியோரின் மைத்துனரும், சிவசுப்பிரமணிம் (ராசன்), சிவா (கனடா), சாந்தகுமாரி, வசந்தகுமாரி, காலஞ்சென்ற சிவரஞ்சன் மற்றும் நவநந்தினி (லண்டன்), நவரூபன், யதீசன் (லண்டன்), பாலன், பாலேந்திரன், குமார், கண்ணன், செல்வி, கலா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.12.2020) சனிக்கிழமை மாலை 3.00 - 6.00 வரை மக்கள் பார்வைக்காக லண்டனில் வைக்கப்படும். அன்றைய தினம் வரமுடியாதவர்கள் www.ninaivukal.info இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

இறுதிக்கிரியை மறுநாள் (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 - 10.00 மணிக்கும் தகனக்கிரியை 10.00 am - 10.45 am மணிக்கும் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.15, கேணியடி லேன், திருநெல்வேலி.**
**077 660 4987**

**தகவல்:**
**மருமக்கள் - சாந்தி**

# புயல், மழை காரணமாக இறந்தன கால்நடைகள்

மழை வெள்ளத்தால் நான்கு ஆடுகளை இழந்த குடும்பத்தினருக்கு மற்றொரு இழப்பாக, அவர்களின் பசு வும் நேற்று இறந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
சம்பவம் மந்துவில் வடக்கில் இடம்பெற்றுள்ளது. இதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்லம்மா என்ற மூதாட்டியின் கால்நடைகளே ஒன்றன்பின் ஒன்றாக இறந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த வாரம் புரேவி புயல் மற்றும் பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் கால்நடைகளை வேறு இடத்துக்கு கொண்டுசெல்ல முடியாத நிலையில் இருந்தேன் என்று குறிப்பிடும் அவர், வீட்டு அருகில் வெள்ளம் இல்லாத இடத்தில் அவற்றைக் கட்டிவைத்திருந்தேன் என்றும் மழையுடன் வீசிய குளிர் காற்றுக் காரணமாக அவை இறந்துள்ளன என்றும் குறிப்பிட்டார். (த-9)


## 45ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**அமரர் உயர்திரு . கிட்டிணன் கந்தசாமி**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

கடந்த 29-10-2020 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்பு மாமா அமரர் உயர்திரு. கிட்டிணன் கந்தசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12-12-2020) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்த னையிலும், மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மானங்கானை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.
077 479 3540



திருத்தம்
கேள்விஅறிவித்தல்
வலிகாமம் தெற்குபிரதேசசபை,சுன்னாகம்.
2020

09.12.2020ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

1. இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(11) ஆம் இலக்க 08.05.2019 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை என்பதற்குப் பதிலாக 03/2020 ஆம் இலக்க 09.10.2020 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை என மாற்றப்படுகின்றது.

2. கேள்வி கோரப்பட்ட அனைத்து வேலைகளுக்குமான அட்டவணையில் வேண்டப்படும் தரம் "C5-C9" என்பதற்குப் பதிலாக "C9/C8;" என மாற்றி யமைக்கப்படுகின்றது.

க.தர்சன்,
தவிசாளர்,
பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு, பிரதேச சபை, சுன்னாகம்.



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
**பாடசாலை அனுமதி 2021**

2021 ஆம் ஆண்டின் புதிய அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தரம் ஆறு மற்றும் தரம் பத்து ஆகிய வகுப்புகளுக்கு அனுமதி பெற விரும்புவோர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி 2020.12.15 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை இணைத்து ஒப்படைக்கவும்.
அனுமதிக்கான நிலையறி பரீட்சை 2021 ஜனவரி முதலாம் வாரத்தில் நடைபெறும். மேலதிக விவரங்களை பாடசாலை அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே.இல:021 223 0040 -அதிபர்-


## ஈஸ்டர் தாக்குதல்;
## விசாரணை அதிகாரிகளுக்கு வட்டிலப்பம் வழங்கிய சாட்சி

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு ஏப்ரல் 21 தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நேற்று சாட்சியமளிக்கச் சென்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி மற்றும் அவரது குழுவினர் அதிகாரிகளுக்கு வட்டிலப்பம் எடுத்துச் சென்றமை தெரியவந்துள்ளது. சுமார் 20 பொதிகளில் இவை எடுத்து செல்லப்பட்டுள்ளதுடன் அந்த பொதிகளில் பலவற்றை ஆணைக்குழுவின் சேவையாளர்கள் சிலரும் இணைந்து ஆணைக் குழுவுக்குள் எடுத்து சென்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. நீதிமன்றத்துக்கு சமமான கௌரவத்துடன் இடம்பெறும் சாட்சி விசாரணை இடம்பெறும் இடத்துக்குள் சாட்சியாளர் ஒருவர் இவ்வாறு வட்டிலப்பம் எடுத்து சென்றமை பெரும் பரபரப்பை எற்படுத்தியுள்ளது. (வ-இ)


இரசாயனவியல் & பௌதிகவியல்
Chemistry & Physics

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களால் தனி அல்லது குழு வகுப்புக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் நேரடியாக அல்லது Zoom மூலம் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: இரசாயனவியல் 076 3860 592
பௌதிகவியல் 077 8900 887




**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல்யமான பல்பொருள் அங்காடிக்கு (Super Market) ஒன்றிற்கு யாழ் நகரை அண்மித்த வேலையாட்கள் தேவை.
கணக்கு உதவியாளர்
சிட்டை எழுதுனர்
பொதி கட்டுனர்

T.P: 077 048 8613


## மரண அறிவித்தல்



**திரு.சுப்பிரமணியம் கோபாலசிங்கம்**
**(ஓய்வுநிலை களஞ்சிய முகாமையாளர்)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், 29/1, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் கோபாலசிங்கம் அவர்கள் கடந்த (10.12.2020) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிந்தாமணி அவர்களின் பாசமிகு கணவரும், சாரங்கன் (கனடா), துஷியந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், உஷானி (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும், கிங்ஸ்ரன், ஏறன் ஆகியோரின் அப்பப்பாவும், காலஞ்சென்ற கற்பகம், சிந்தாமணி, நாகம்மா, கமலம், தில்லாதைப்பிள்ளை மற்றும் கந்தையா, பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு தம்பியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பொன்னுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.29/1, றக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்,**
**தொ.பே:** 076 1540832 **(இலங்கை)**
0016478086952 **(கனடா)**

தகவல்:
**கோ.துஷியந்தன் (மகன்)**
**கோ.சாரங்கன் (மகன்)**

## மரண அறிவித்தல்



**சின்னம்மா நாகதம்பி**

மாமுனை, செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா நாகதம்பி நேற்று (11.12.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம்-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் நாகதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை, முருகேசு, நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நாகம்மா மற்றும் சிவகொழுந்து, செல்லமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனியும், துரைராஜலிங்கம் (அமெரிக்கா), வசந்தகுமாரி (ஜேர்மனி), விஜயகுமாரி (ஆசிரியை-யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணா வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு தாயாரும், இராசலட்சுமி (அமெரிக்கா), குணகேஸ்வரன் (ஜேர்மனி), சிவபாலன் (பொன்னரசி நகையகம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அருள்ராஜ், காலஞ்சென்ற மதன்ராஜ், பகீரதி, காயத்திரி, கார்த்திகா, கார்மிளா, சபார்த்தினி, சாரங்கன், சாருயன், சிவசுதன், வினோ, சத்தியபவான், அதீஸ்கரன், தினேஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அஸ்வின், ஆகாஷ், துவாரகா, பாரதி, குணாளன், சரண், ஆர்த்திகா ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமகிருஸ்ண ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

தகவல்:
**ஐ.சிவபாலன் (மருமகன்)**
**(பொன்னரசி நகையகம்)**
**0777 066 427**

# கொரோனா பாதிப்புக்குள்ளான அரச ஊழியர்களுக்கு இழப்பீடு

அரச அலுவலர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டால் நாளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அரச பணியாளர்களின் செலவீனங்களை ஈடுசெய்யும் வகையில் அக்ரஹார காப்புறுதி திட்டத்தின் ஊடாக இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. குறித்த தொகையானது அதிகபட்சமாக 10 நாள்களுக்கு வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக அரச பணியாளர் இறந்தால் அவரின் குடும்பத்தினருக்கு 7 லட்சம் ரூபா வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## ஜனவரி....

நிசாந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது முன்பள்ளிகளை ஆரம்பிப்பது தொடர்பில் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. சுகாதார அமைச்சின் பரிந்துரைகள் கிடைக்கும் வரை இது தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.

அதேவேளை, தேசியமுன்பள்ளிகொள்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். அது தொடர்பான சட்ட வரைபை கல்வி அமைச்சர் கையளிப்பார். என்றார். (க-இ)

## தாய்க்கும்...

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

28 மற்றும் 5 வயதுடைய இருவரே கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் கொரோனா சிகிச்சை மையத்துக்கு மாற்றப்படுவார்கள் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-26,110)

## மருதனார்மடத்தில்....

சந்தைப் பகுதியில் உள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகள் 44 பேருக்கு கடந்த 9ஆம் திகதி எழுமாற்றாகப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 42 பேருக்கு தொற்று இல்லை என்ற முடிவு கிடைக்கப் பெற்றது. இருவரின் பி.சி.ஆர். மாதிரிகள் போதாது என்ற பெறுபேறு கிடைக்கப் பெற்றதால், நேற்றுமுன்தினம் மீளவும் பி.சி.ஆர். மாதிரி பெறப்பட்டது. அவர்களில் ஒருவருக்கு நேற்றைய தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுன்னாகம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தின் பின்பாகவுள்ள 38 வயதான குடும்பத் தலைவர் ஒருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் உடனடியாகவே கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அவருடன் தொடர்புடைய 5 குடும்பங்கள் உடனடியாகவே நேற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மரக்கறி வியாபாரத்துடன், முச்சக்கர வண்டி மற்றும் பட்டா வாகனங்களும் வைத்துள்ளார். அவற்றில் அவர் பல இடங்களுக்கும் சென்றிருக்கின்றார். பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படும் வரை அவர் மருதனார்மடம் சந்தைக்குள்ளும் நடமாடியுள்ளார். மரக்கறி வியாபாரம் மேற்கொள்வதுடன், இவர் அதிகம் மரக்கறி ஏலமிடும் இடத்தில் நிற்பவர் என்றும் கூறப்படுகின்றது. இதனால் அவருடன் அண்மைய நாள்களில் தொடர்புகளைப் பேணியவர்களை இனங்காண்பது சிக்கலானதாக மாறியுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவருக்கு எவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டது என்பதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. (ஒ,5,26)

## 31,000

31 ஆயிரத்து 375 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 22 ஆயிரத்து 831 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 398 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## நோய்....

படுகின்றது.

'நாள்களுக்கு முன்னர் காய்ச்சல் தடிமன் வந்தது. அது வருவதற்கு சில தினங்களுக்கு முன்னர் மழைக்குள் மரவள்ளிக் கிழங்கு பிடுங்கினேன். அதனால் காய்ச்சல் வந்தது என்று நினைத்தேன்' என்று தொற்றாளர் சுகாதாரப் பிரிவினருக்கு கூறியுள்ளார். (ஒ.5)

## சுன்னாகம்...

றைப்படுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மல்லாகம் நீதிமன்றிலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகளில் 20 பேர் வரையில் தம்புள்ள மரக்கறிச் சந்தைக்கு தினமும் சென்று வருபவர்கள். அத்துடன் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மருதனார்மடம் சந்தைக்கு விவசாயிகள், பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இதனால் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் இறுக்கமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் பல பரிந்துரைகளை பிரதேச சபைக்கு முன்வைத்துள்ளனர். தொடர்ச்சியாக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் இது தொடர்பான வழக்கு ஒன்று மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் சில முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் போதியளவில் அது முன்னெடுக்கப்படவில்லை என்று சுகாதாரத்து றையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில் சமூக ரீதியான பி.சி.ஆர். சோதனைகள் நாடு முழுவதிலும் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மருதனார்மடம் சந்தையிலுள்ள வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். சோதனை முன்னெடுப்பதற்கான விவரங்களை சுகாதாரத்துறையினர் பிரதேச சபையிடம் கோரியபோதும், பிரதேச சபை அதனை வழங்கவில்லை. இறுதியாக 9 தினங்களுக்கு முன்னரும் பி.சி.ஆர். சோதனைக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதும் பிரதேச சபையால் அது கவனத்தில் எடுக்கப்படவில்லை என்று சுகாதாரத்துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ,5)

## மருதனார்மடம்...

ளுக்கு முதல் கட்டமாக இன்று பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்படவுள்ளன. (ஒ,5,26)

## புலிகள்....

வேளை, அவர் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளும் மிகவும் பலம் பொருந்தியவர்கள். அவர்களின் வீரத்தையும் தியாகத்தையும் நான் கொச்சைப்படுத்தமாட்டேன். ஆனால், நாட்டின் சட்டத்தை மீறி அவர்கள் செய்த மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அதனால்தான் அவர்களைப் பகிரங்கமாக நினைவுகூரும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கு எதிராக நாடாளுமன்றில் நான் உரையாற்றினேன்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வைப் பகிரங்கமாக நடத்த அனுமதிக்க முடியாது என நான் வலியுறுத்திய காரணத்தால் என்னைத் தமிழ் மக்களுக்கு எதிரானவனாக வெளிக்காட்ட அரசியல்வாதிகள் சிலர் முயன்றுள்ளார்கள்.

ஆனால், நான் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்லன். ஆயுதப் போராட்டத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த அவலங்களை நேரில் கண்டறிந்தவன் நான். போர் முடிவுக்கு வந்திராவிட்டால் அவர்களின் அவலங்கள் தொடர்ந்திருக்கும். மீண்டுமொரு போரை தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிட்டபோது வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எனக்குத் தந்த அமோக ஆதரவை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். இன்றும் தமிழ் மக்களை நான் நேசிக்கின்றேன். அரசியல் தீர்வே அவர்களின் கனவாக இருக்கின்றது. முழு நாடும் ஏற்கும் ஒரு தீர்வு உடனடியாகக் காணப்பட வேண்டும்-என்றார். (எ-22)

## அரசியல் கைதிகள்...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடுவித்தால் அதை நாம் எதிர்க்க மாட்டோம்.

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது அரசியல் பழிவாங்கல் காரணமாக நானும் சிறையில் சில காலத்தைக் கழித்தேன். அப்போது சிறையிலிருந்த தமிழ் அரசியல் கைதிகள் பலருடன் நேரில் பேசியிருக்கின்றேன். அவர்கள் தங்கள் துயரங்களை நேரில் என்னுடன் பகிர்ந்தார்கள். அவர்களில் சிலர் 15 வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

குற்றம் செய்தார்களோ இல்லையோ அவர்கள் சிறைகளில் பல வருடங்கள் தண்டனைகளைப் பெற்று விட்டார்கள். அப்படியானவர்களை அரசியல் தீர்மானம் எடுத்து ஜனாதிபதி விடுவித்தால் அதற்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டோம்.

எமது இந்த நிலைப்பாட்டை தமிழ் அரசியல்வாதிகள் சிலரிடமும் நாம் தெரிவித்திருக்கின்றேன். ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் பலர் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை தமது அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றனர். அதனால் சிறைகளில் பல வருடங்கள் இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி தலைமையிலான அரசிடம் நாம் நேரடியாகத் தெரிவிக்க முடியாத நிலை உள்ளது.

அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுவித்தால் அந்த விடயத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் தலையில் வைத்துக் கொண்டாடி இனமுறுகலை ஏற்படுத்தக் கூடாது.

சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மறுவாழ்வு வழங்கி விடுவித்த அரசு, தமிழ் அரசியல் கைதிகளையும் ஏதோவொரு விதத்தில் விடுவிக்க முடியும். இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்என்றார். (எ-22)

## பளை....

த்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்காடு பகுதியில் டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த அவர் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் வழியிலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இயக்கச்சி பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடமையாற்றும் 56 வயதுடைய கிருஸ்ணன் நவநீதன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி பளை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் இத்தாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்திலிலும் வயோதிபர் ஒருவர் உயிழந்தார். (எ-ம-6,113,26)

## இந்திய....

டாவிட்டால், பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடலில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடக்கின்றது என்று தெரிவித்துள்ள முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள், இது தொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டியபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் இது தொடர்பாக நடந்த கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள், நேற்றுக் கடலுக்குச் சென்று இந்திய மீனவர்களை அகற்ற நடவடிக்கை எடுப்போம் என்று அறிவித்திருந்தனர்.

நேற்றுக் காலை மீனவர்கள் 25 படகுகளில் கடலுக்குச் செல்லத் தயரானபோது, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் அவர்களைச் சந்தித்தனர்.

மாவட்ட மேலதிக செயலர் மீனவர்களுடனும், அங்கு நின்ற வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனுடனும் நீண்டநேரம் கலந்துரையாடினார்.

இந்தப் பிரச்சினை இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினை. இதை இராஜதந்திர ரீதியிலேயே தீர்த்து க் கொள்ள முயல வேண்டும். இரு நாட்டு மீனவர்களும் நேரடியாக மோதிக் கொள்வது பிரச்சினைகளை மேலும் உருவாக்கும். இந்தப் பிரச்சினை தொடர்பாக மாவட்டச் செயலர் ஊடாக வடக்கு மாகாண ஆளுநர், கடற்றொழில் அமைச்சர் மற்றும் ஜனாதிபதி, பிரதமருக்குத் தெரியப்படுத்தி தீர்வு பெற்றுத்தரப்படும் என்று அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் தங்களுக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்றும், இல்லையேல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பெரும் போராட்டம் நடத்துவதுடன், இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த தாங்களே நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-246)

# தேர்தலுக்கு தயாராகுங்கள்

*ஐ.தே.க. தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.12

அரசு மீதும், எதிர்க்கட்சி மீதும் மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர். எனவே தேர்தலுக்கு தயாராகுங்கள் என்று ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க உறுப்பினர்களுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாகாண சபைத் தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. கடந்த மற்றும் இவ்வாரம் முழுவதிலும் பஸில் ராஜபக்ச அலரி மாளிகையில் இதற்கென பல்வேறு சந்திப்புகளை முன்னெடுத்துள்ளார். இந்தச் சந்திப்புகளில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

பழைய முறைமையில் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான திருத்தச் சட்டவரைவை ஜனவரியில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி சமர்பிக்கவுள்ளது. மாகாண சபைத் தேர்தலை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளே அரசாங்கத்திடம் உள்ளது. எனவே தேர்தலுக்கு தயாராக வேண்டும். கட்சி மறு சீரமைப்பு பணிகளை விரைவு செய்து வலுவாகச் செயற்பட வேண்டும். மக்கள் ஆளும் கட்சியில் குறுகிய காலத்தில் வெறுப்பைக் கொண்டுள்ளனர். எதிர்பார்த்தளவு எதிர்க்கட்சியின் நடவடிக்கைகளும் அமையவில்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் தலை தூக்க எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் வழிவகுக்கும் என்றார்.

(ஐ-இ)

# முதலிடத்தில் கொழும்பு

லங்கா பிறிமியர் லீக் தொடரின் நேற்றிரவு இடம்பெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் தம்புள்ள வைக்கிங் அணியை வீழ்த்தி புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை பிடித்தது கொழும்பு கிங்ஸ் .

ஹம்பாந்தோட்டை சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. தம்புள்ள அணி சார்பில் டிக்வெல்ல, பட்டேல் இணை ஆரம்ப வீரர்களாக களமிறங்கியது. நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் இணைப்பாட்டமாக 50 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது, பட்டேல் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த தரங்க ஓட்டமெதுவும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்துவந்த அஞ்சலோ பெரேரா டிக்வெல்லவுடன் இணைந்து அதிரடி காட்டினார். இருவரும் இணைந்து சத இணைப்பாட்டத்தை நெருங்கிய போது டிக்வெல்ல 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து அதிரடியில் சானகவும் இணைய இருபது பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது தம்புள்ள வைக்கிங். துடுப்பாட்டத்தில் அஞ்சலோ பெரேரா 74 ஓட்டங்களையும், சானக 28 ஓட்டங்களையும் குவித்தனர்.



பந்துவீச்சில் அஹமட் இரு இலக்குகளையும் மத்தியூஸ் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

204 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கியது கொழும்பு அணி. சண்டிமல் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இவன்ஸ் 53 ஓட்டங்களை பெற்றாலும் தொடர்ந்து வந்த றமோனட்(14), உதார(1) ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினர். மத்திய வரிசையில் பிரியஞ்சன், திக்சில, அஹமட் ஆகியோர் அதிரடி காட்ட 18.5 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது கொழும்பு கிங்ஸ். துடுப்பாட்டத்தில் பிரியஞ்சன் 47 ஓட்டங்களையும், திக்சில 16 பந்துகளில் 31 ஓட்டங்களையும், அஹமட் 22 பந்துகளில் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பட்டேல், புஸ்பகுமார, அன்வர் அலி, சானக தலா ஒவ்வொரு இலக்குகளை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக அஹமட் தெரிவுசெய்யப்பட்டார்.

(ரி-4)

*20 நாள் குழந்தையின் ஜனாஸா எரிப்பு விவகாரம்*

# வவுனியாவில் நேற்று மௌலவி போராட்டம்

வவுனியா, டிசெ. 12

20 நாள்களேயான பச்சிளம் குழந்தையின் ஜனாஸாவை எரித்துள்ளீர்கள். கொலைசெய்து பழக்கப்பட்டவர்களுக்கு இதுவொன்றும் பெரிய விடயமல்ல - என்று தெரிவித்து வவுனியாவில் மௌலவியொருவர் அரசுக்கு எதிராக இன்று போராட்டம் நடத்தியுள்ளார்.

வவுனியா பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாக நேற்றுக் காலை 10.30 மணியளவில் அவர் தனது போராட்டத்தை முன்னெடுத்தார்.

கோரோனா ஒரு கொடிய உயிர் கொல்லி நோயல்ல. பன்றி இறைச்சியில் உள்ள வைரசைவிட கொரோனாவில் கொடிய வைரஸ்கள் கிடையாது. காய்ச்சலும், தலையிடியும், சளியும் எப்படி ஒரு மனிதனைக் கொல்லும். கோரோனாவுக்கு தீர்வு உடல்களை எரிப்பதா?. ஏன் இந்த அநியாயத்தை முஸ்லிம்களுக்கு செய்கிறீர்கள்?. முள்ளிவாய்க்காலில் உரிமை கேட்டவர்களை மெனிக்பாமில் அடைத்தீர்கள். இது நியாயமா?. தமிழனும் முஸ்லிமும் கதைத்தால் தீவிரவாதி. ஆட்சி வெறி, அதிகார வெறி, அரசியல் துஷ்பிரயோகம் ஆகியவையே உங்களை இப்படிச் செய்விக்கின்றது. 20 நாள்களான குழந்தையின் ஜனாஸாவை எரித்தீர்கள். நீங்கள் கொலைசெய்து பழக்கப்பட்டவர்கள். முள்ளிவாய்காலில் பச்சிளம் குழந்தைகளைக் கொன்றீர்கள். உங்களிடம் இரக்கம் இருக்குமா?. தமிழ்களின் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தினீர்கள். மூன்று இனத்தையும் அழித்த கருணா உங்களுக்கு நண்பன். ஆனால் உரிமைக்காக போராடிய பிரபாகரன் பயங்கரவாதி என்றீர்கள் - என்றார்.

(ம-110,18)

# கிழக்கு மாகாணத்தில் முதல் இறப்புப் பதிவு

கொழும்பு, டிசெ. 12

கிழக்கு மாகாணத்தில் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக முதலாவது இழப்பு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய வயோதிப ஆணொருவரே நேற்று உயிரிழந்தவராவார். கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் லதாகரன் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

(ம-இ)

# தொழில் நிமித்தம் சென்றுவந்தால் தனிமைப்படுத்தல் தேவையில்லை!

*யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் நிமித்தம் வெளிமாவட்டங்களுக்கு செல்வோர் மற்றும் மாவட்டங்களுக்கு இடையே பயணிப்போர் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வணக்கஸ் தலங்களுக்குள் 50 பேர் ஒரே தடவையில் அனுமதிக்கப்படுவர். அவர்களின் பெயர் விவரங்கள் பதிவேட்டில் பதியப்பட வேண்டும். சுகாதார நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். அதேபோன்று பயிற்சிகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பனவற்றை நடத்துவதற்கு 50 பேர் அனுமதிக்கப்படுவர். சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

தொழில் நிமித்தம் செல்வோர், அத்தியாவசிய தேவைகளுக்காக செல்வோர் மற்றும் அரச அலுவலர்கள் மற்றும் மாவட்டங்களுக்கு இடையில் பயணிப்போர் தனிமைப்படுத்தப்படமாட்டார்கள். ஆனால் அவர்கள் தம் வேலைக்குரிய அடையாள அட்டை மற்றும் அத்தியாவசியத் தேவைக்காகச் சென்று வந்தோம் என்பதற்கான சான்றுகளை வைத்திருக்க வேண்டும் என்றார்.

(ம-7)

*வலி. தென்மேற்கு பிரதேச சபையில்*

# சபையில் பாதுகாப்பு இல்லை; ஹெல்மட் அணிந்த உறுப்பினர்

யாழ்ப்பாணம், டிசெ. 12

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நேற்றைய அமர்வில், சபையில் பாதுகாப்பில்லை என்று தெரிவித்த உறுப்பினர் ஒருவர் தன் பாதுகாப்புக்காக ஹெல்மெட்டை அணிந்துகொண்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த மாதம் 20ஆம் திகதி சபை அமர்வு இடம்பெற்றது. அன்றையதினம் ஏற்பட்ட குழப்பம் காரணமாக சபை ஒத்திவைக்கப்பட்டது. நேற்று அமர்வு இடம்பெற்றது. கடந்த 20ஆம் திகதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் நேற்றும் சபையில் குழப்பம் விளைவித்தபோது, ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் ஒருவரே எழுந்துசென்று ஹெல்மட்டை எடுத்து அணிந்துகொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்துத் தவிசாளரால் சபை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

(ம-27)

ஏசியன் தளபாடம்
மாபெரும் மலிவு விற்பனை
230 நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் யாழ்ப்பாணம்.
077 358 3879, 076 826 9416

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள Samsung Singhagiri நிறுவனத்திற்கு Samsung Promoter என்ற பதவிக்கு வேலையாள் தேவை. வயது எல்லை: 18 - 28
077 706 4368, 021 497 6660

வேலையாள்கள் தேவை
நெல்கொள்வனவு மையத்திற்கு
மூன்று வருட முன் அனுபவமுள்ள மூன்று வெற்றிடங்கள் தேவைப்படுகின்றது.
▶ கிளிநொச்சி நகரத்தை அண்மித்த ஆண்கள் விரும்பத்தக்கது.
▶ வயது எல்லை: 32 - 45
077 477 3749

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.